# கம்பர் யார்?

3462

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIV[illegible] CHETTIAR
[illegible]

டி. கே. சிதம்பரநாத முதலியார்

ராம. அ. அ. இய
பாகனேரி

வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

புதுமைப் பதிப்பக வெளியீடு - 5

உ

# கம்பர் யார்?

3462

டி. கே. சிதம்பரநாத முதலியார்

புதுமைப் பதிப்பகம்

சென்னை

1941

முதல் பதிப்பு : 14-12-1941

புதுமைப் பதிப்பகம்
3, கோவிந்தப்ப நாயக்கன் தெரு
சென்னை

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை - சென்னை

விலை ரூபா ஒன்று

உ

# முகவுரை

இந்த இருபதாவது நூற்றாண்டில் நமக்கு எத்தனையோ விஷயங்கள் தெரியும். பூமியின் விஸ்தாரம் தெரியும், நட்சத்திர மண்டலத்தின் விஸ்தாரமும் தெரியும்; ஆகாயக் கப்பல், மோட்டார்கார், நீர்மூழ்கி, டாங்கி இவைகளுடைய உறுப்பும் ஓட்டமும் தெரியும். கம்பருக்கு, இவைகள் விஷயமாக ஒன்றுமே தெரியாது. ஆனால், சில விஷயங்கள்பற்றி, அதாவது, உலகக் காட்சிகள், மக்கள் இயல்பு, நாடகப் பண்பு, உடல் வனப்பு, நீதிநெறி, அவதாரதத்துவம் - இவைகள்பற்றிக் கம்பர் தெரிந்துள்ள உண்மைகளையும் நுட்பங்களையும் பார்த்தால், 'ஏது, நமக்கு ஒன்றுமே தெரியாது' என்றுதான் சொல்லத் தோன்றும். கம்பர் மூலமாக

## முகவுரை

அவைகளைத் தெரிந்துகொள்ளுதல் மிகவும் உபயோகமான காரியமே.

இந்த அருமையான விஷயங்கள் பற்றி, திருச்சிராப்பள்ளி அகில இந்திய ரேடியோ நிலையத்தார் என்னைப் பேச வேண்டுமென்று கேட்டபோது, எனக்கு மிகுந்த திருப்தி உண்டாயிற்று. அப்படியே இந்தப் பொருள்கள் பற்றி ஆறுமுறை ரேடியோவில் பேசினேன். கம்பராமாயணத்தோடு நெருங்கிப் பழகாதவர்களுக்கு இந்தப் பேச்சுக்கள் கம்பரை இனந் தெரிவதற்கு எளிய உபாயமாயிருக்கும் என்ற காரணத்தால் புதுமைப் பதிப்பகத்தார் அவைகளை வெளியிடுகிறார்கள். அவைகளோடு, 'ஆனந்த விகட'னில் வெளியான கட்டுரை இரண்டும் சேர்த்திருக்கிறது. வெளியிடுவதற்காக அனுமதி தந்த திருச்சி ரேடியோ நிலையத் தலைவருக்கும் 'ஆனந்த விகடன்' ஆசிரியருக்கும் எங்கள் நன்றி உரியதாகிறது.

சென்னை
14-12-1941

டி. கே. சிதம்பரநாத முதலியார்

3462

# பொருளடக்கம்


பக்கம்

1. கம்பரும் உலகக் காட்சிகளும் ... 1
2. கம்பரும் மக்கள் இயல்பும் ... 15
3. கம்பரும் நாடகப் பண்பும் ... 28
4. கம்பரும் உடல் வனப்பும் ... 41
5. கம்பரும் நீதிநெறியும் ... 51
6. கம்பரும் அவதார தத்துவமும் ... 61
7. கம்பர் கவிக்கு வந்த வினை ... 74
8. பாட்டினால் வந்த தலைக்கிறக்கம் ... 101

# கம்பர் யார்?

# 1

## கம்பரும் உலகக் காட்சிகளும்

"கவியென்ருல் அப்படியே பயந்து ஓடி விடுவார்கள் ஆங்கிலேயர்கள்" என்று ஆங்கிலப் புலவர் ஒருவர், சமீபத்தில் வெளி யிட்ட 'இலக்கிய உணர்ச்சி'* என்னும் புத்த கத்தில் எழுதியிருக்கிருர். "ஒரு கூட்டத்தைக் கலைப்பதற்கு, கொள்ளை நோய் வந்துவிட்ட தென்று சொல்லிவிடுதல் போதாது ; தண்ணீர் கொண்டு சாட்டைபோல் அடிக்கிற இயந்திரக் குழாய்களும் போதாது. கவி வரப்போகிறது

*Literary Taste* by Arnold Bennett.

என்று சொல்லிவிட்டால், அப்படியே மாயமாய்ப் பறந்து போய்விடும் கூட்டமெல்லாம்" என்கிறார்.

ஆனால், தமிழ்க் கவிகள் சம்பந்தமாகத் தமிழ்மக்களுக்கு மொத்தத்தில் வெறுப்பில்லை; மோகந்தான். உலகியல் பற்றியுள்ள சமுதாய நாடகங்களில்க்கூட, வசனப்பேச்சு எவ்வளவு இருந்தபோதிலும், நாடக ரஸம் எவ்வளவு நிறைந்திருந்த போதிலும், ஜனங்களுக்குத் திருப்தி உண்டாவதில்லை. ஒரு பாட்டுப் பாடி விட்டால் போதும். தாயுமானவர் பாடலோ, அருட்பாவோ, பட்டினத்துப் பிள்ளையார் பாடலோ - எந்தப் பாட்டாயிருந்தாலும், பாட்டு என்றமாத்திரத்தில் நிமிர்ந்து உட்காருவார்கள்; உற்சாகத்தோடு அனுபவிப்பார்கள்.

திண்ணைகளிலிருந்து கம்ப ராமாயணப் பாடல்களைப் பாடிப் புலவர் பிரசங்கம் செய்யும்போது, ஆடவரும் பெண்டிரும் நூற்றுக் கணக்காக - சிலவேளை ஆயிரக்கணக்காகவும்-

கேட்டு அனுபவித்துக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆயிரம் வருஷத்துக்கு முன்ன தாகப் பாடிய தமிழ்க்கவிகளை சாமானியத் தமிழர்கள் கேட்டு அனுபவிக்கிறார்கள் என்று சொன்னால், மேலே குறித்த ஆங்கில ஆசிரியர் ஆர்னால்ட் பென்னெட் எவ்வளவாக வியப் பாரோ சொல்லமுடியாது.

*   *   *   *

உலகத்தில் சிறந்த கவிகளுள் ஒருவர் கம்பர். அவர் பாக்கியசாலிதான்; தமிழ் மக்களும் பாக்கியசாலிகள்தான். அவருடைய கவிகளைக் கண்டு நம்மவர் ஓட்டம்பிடித்துவிடவில்லை யல்லவா! உண்மையில் கம்பருடைய கவிகள் எல்லாம் தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த மக்களுக்கு அழியாச் செல்வமே.

மக்கள் அனுபவிக்கக்கூடிய ரஸபாவங்கள் ஒன்பது என்று சொல்லிவிடக்கூடாது; எத்தனையோ ஒன்பதுகள். அவைகளெல்லாம் தனித்தனி ஒளியோடும் மணத்தோடும் கம்ப ருடைய உள்ளத்தில் உலாவி வருகின்றன.

## கம்பர் யார்?

சோகம் என்றால் எத்தனையோ ரகம். அப்படியே வீரம், கருணை, காதல் முதலான ரஸங்கள் பலதிறப்பட்டவைகளாய்க் காணப்படுகின்றன. இவைகளையெல்லாம் மக்களுக்கு எடுத்துக்காட்டவே கம்பராமாயணம் எழுந்ததென்றால்கூடக் குற்றமில்லை. ஆயிரக் கணக்கான பாடல்கள் கொண்டது கம்பராமாயணம். புலவருடைய உள்ளமாகிய ஆழ்ந்த கடல், தன்னுடைய ரத்தினங்களையெல்லாம் வாரிக் கொழிப்பதற்குப் போதுமான துறைகளை உடையதுதான், அவர் செய்த இதிகாசம்.

கம்பராமாயணம் என்றால், வால்மீகி எழுதிய மூல கதையை ஒருவகையாகத் தழுவி எழுதியதே ஒழிய, அதன் மொழி பெயர்ப்பல்ல. ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கில நாடகாசிரியர் எப்படிப் பழைய கதைகளை சாரச் சட்டங்களாக உபயோகித்துக்கொண்டாரோ, அப்படியேதான் கம்பரும் வால்மீகி செய்த கதையைச் சாரச் சட்டமாக

உபயோகித்துக் கொள்கிறார். கட்டிடமெல்லாம் சொந்த சிருஷ்டியே.

*  *  *  *

மனுஷ இயல்புகளை, சமய உண்மைகளை, உலகக் காட்சிகளை - இன்னும் எத்தனையோ விஷயங்களை, கம்பர் தெய்வப் பாடல் ரூபமாகச் சித்திரித்திருக்கிறார். உலகக் காட்சிகளைச் சித்திரிக்கிற முறையைப் பார்ப்போம்.

உலகத்திலுள்ள கவிஞர்கள் அனேகமாய் எல்லோருமே இயற்கைக் காட்சிகளையும் செயற்கைக் காட்சிகளையும் வருணிக்க முயலுவார்கள். காட்சிகளை அவர்கள் எவ்வளவு அனுபவித்தபோதிலும், வருணனைகளை வாசகர்கள் அனுபவிக்கிறார்களா என்பது சந்தேகமான காரியமே. வாசகர்களுடைய பொறுமையை அவை அனேகமாய்ச் சோதித்துவிடும். தமிழில், நாட்டு வருணனை, நகர வருணனை, மலை வருணனை என்றெல்லாம்

வருணனைகள் உண்டு. இவற்றுக்குள் ஒருவர் சிக்கிக்கொண்டால் பெரிய ஆபத்துத்தான். ஆனாலும், கம்பர் வந்து காட்சிகளை வருணிக்கிறதென்றால், ஏதாவது ஒரு மனுஷ **பா**வத்தை உள்ளே ஏற்றிவிடுவார். அது காரணமாக, அவர் வருணிக்கும் காட்சி நம்முடன் நேர் முகமாகப் பேசுகிற பான்மைக்கு வந்து விடுகிறது. உதாரணமாகப் பார்க்கலாம்.

**ப**னிக்காலத்தில் விடியற்காலம் நாம் உலாவப் போகிறோம். புஷ்பக் கொடி ஒன்றைச் சிலந்தி பின்னிய வலை பொதிந்து சுற்றியிருக்கிறதைப் பார்க்கிறோம். பனித்துளிகள் ஒட்டிய காரணத்தால் வலை நன்றாய்க் கண்ணுக்குத் தெரிகிறது. அதை ஊடுருவிப் புஷ்பக் கொடியையும் பார்க்க முடிகிறது. இது மிக்க அழகிய காட்சி என்பதாகக் கம்பர் நமக்கு எடுத்துக் காட்டுகிறார். எப்படி? மனுஷ **பா**வத்தை அதோடு கலக்கச் செய்வதால் தான். சிலம்பி பின்னிய வலைதானே என்று

சொல்லக் கூடியதான *டாக்கா மஸ்லின் போன்ற நுண் துகில் (மெல்லிய ஆடை) அந்தக் காலத்தில் உண்டு.

> நுட்சி லம்பி
> வலந்தன நுண்துகில்.

இந்த நுண் துகிலை, மலர் சூடிய கருங் குழலார் பலர் அலங்காரமாகப் போர்த்திருந் தார்கள். இதை,

> நுட்சி லம்பி
> வலந்தன நுண்துகிற்
> கள்ச்சி லம்பு
> கருங்குழ லார்குழு

என்கிறார். பெண்கள் குழாத்தை ஞாபகப் படுத்துவதால் சிலம்பியின் வலைக்குள்ளும், அது பொதிந்துள்ள புஷ்பக் கொடிக்குள்ளும் எவ்வளவோ அழகு ஏறிவிடுகிறது.

---

*டாக்கா என்பது வங்காளத்திலுள்ள ஒரு புராதன நகரம். அங்கு கையால் நெய்யப்பெற்று வந்த மஸ்லின் துணி முன்பு உலகப் பிரசித்தி பெற்றிருந்தது.

ஆனால், கம்பருடைய வருணனை சக்தி, அரை அடி, கால் அடி, அரைப்பாட்டு, கால் பாட்டு, இவைகளைச் சொல்லிப் பார்த்தால் தெரியாது. கவியின் நாலடியையும் சேர்த்து முழு உருவமாகப் பார்த்தால்தான் தெரிய வரும்.

இது சம்பந்தமாக ஒன்றிரண்டு கவிகளை இங்கே ஞாபகப்படுத்தலாம்.

தசரத சக்கரவர்த்தியானவர், மந்திரிமார் களை எல்லாம் சபாமண்டபத்தில் கூடச் செய்து, அவர்களுடைய சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு ராமனுக்கு முடிசூட்டுகிறது என்று தீர்மானிக்கிறார். ராமனிடத்தில் இதைச் சொல்வதற்காக, சபாமண்டபத்துக்கு வரும்படி அவனுக்குச் சொல்லியனுப்புகிறார். இருபுறமும் மாடமாளிகைகள் அமைந்துள்ள வீதிவழியாக ராமன் தேரில் வருகிறான். வகை வகையான பெண்கள் பலபல இடங்களில் நின்றுகொண்டு அவனைப் பார்க்கிறார்கள். ஆசையும் நாணமும் பலவேறு வகையாக

உட்கலந்து, கண்கள் சில வாள்போலவும், சில இரத்த ரேகை படர்ந்த வேல்போலவும் பிரகாசிக்கின்றன. வேறு சில கண்கள், வண்டு போல் திகைத்து உலாவுகின்றன; கெண்டை மீன்கள் போலவும் பிறழ்கின்றன. வாளும் வேலும்போன்ற கண்களின் கடைவீச்சானது, காது எவ்வளவு தூரம் என்று பார்ப்பதற்காக வீசி அளந்தமாதிரி இருந்தது.

அளந்த
வாள்அ ரத்தவேல்,
வண்டொடு கெண்டைகள்
மயங்க :

கண்கள் இவை. இனி, எங்கெந்த இடங்களில் நின்று பார்க்கிறார்கள்? வரிசையாக நிறுத்திய நீண்டுயர்ந்த தூண்களில் ஒதுங்கியும் ஒதுங்காமலும் நின்று பார்க்கிறார்கள். அதாவது வாசல்களில்த்தான்.

மாடி முகப்பிலுள்ள நிலாமுற்றங்களின் மேல், ஆளகம் என்ற புஷ்பக்கொடி

குழைகளோடு நெகிழ்ந்தவண்ணமாய்ப் பசும் பந்தலாகப் படர்ந்திருக்கிறது. அந்த அரமியத் தலத்தில், அதாவது நிலாமுற்றத்தில், ஆளகக் கொடிகளுக்கிடையேயும் முகம் தெரிகிற நிலையில் நின்று பார்க்கிறார்கள்.

**நீள்ள பூத்தொடர்**
**வாயினும், குழையொடு**
**நெகிழ்ந்த**
**ஆளகத்திடை**
**அரமியத் தலத்தினும்,**
**அளந்த**
**வாள்அரத்தவேல்**
**வண்டொடு கெண்டைகள்**
**மயங்க -**

என்று இடையே கண்களைச் சொல்லிவிட்டு, மூன்றாவதாக நின்று பார்க்கிற இடத்தைச் சொல்லுகிறார். அது, அவர்களுடைய முக மாகிய சித்திரத்தை அலங்காரமான சட்டம்

போட்டுக் காட்டின மாதிரி இருக்கிறது. செய்யுளை முதலிலிருந்து பார்ப்போம் :

**நீள்ள முத்தொடர்**
**வாயினும், குழையொடு**
**நெகிழ்ந்த**
**ஆள கத்திடை**
**அரமியத் தலத்தினும்,**
**அளந்த**
**வாள்அ ரத்தவேல்**
**வண்டொடு கெண்டைகள்**
**மயங்கச்**
**சாள ரத்தினும்,**
**பூத்தன தாமரை**
**மலர்கள்.**

கண் என்று சொல்லவில்லை ; முகம் என்று சொல்லவில்லை ; பார்த்தார்கள் என்றும் சொல்லவில்லைதான். ஆனாலும், எல்லாம் நம் கண்முன் வந்து பார்த்துக்கொண்டு நிற்கின்றன. காட்சியை வியக்கவேண்டியிருக்கிறது.

அதைவிட அதிகமாக, செய்யுளை வியக்க வேண்டியிருக்கிறது.

*    *    *

இன்னொரு காட்சியையும் ஞாபகப்படுத்திக் கொள்ளலாம் :

அயோத்தியிலுள்ள ஜனங்கள் எல்லோரும் 'ராமன் முடிசூடுவான், பிறகு அலங்கார மாகப் பவனி வருவான்' என்று எதிர்பார்த் திருந்தார்கள். அது எப்படி முடிந்தது? நாடு நகரம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அருமை ராமன் காட்டுக்குப் போகிருன் என்ருகிவிட்டது! இதைப் பார்க்க அவர் களுக்குச் சகிக்குமா? முடியாது. அயோத்தி நகரம் ஒரே துன்பத்தில் அழுந்திக் கிடக்கிறது. அங்கே நாம் இருந்திருந்தால், காணும் காட்சி யெல்லாம் துக்கத்தில் மூழ்கியிருப்பதாகத் தோன்ருதா? மரமெல்லாம் சோர்ந்த வண்ண மாய்த் தோன்றும். பட்சிகளும் மிருகங்களும் அப்படியேதோன்றும். இப்படித்தோன்றுவது

உண்மையே. கம்பருக்கு, அந்த வேளை, கதிரவன் அஸ்தமித்ததிலும் ஒரு சோகம் தோன்றியது. எப்படி என்று பார்க்கலாம்.

இடம் மலைப் பிரதேசம். அந்தி நேரம். மஞ்சள்வெயில் மலைச்சிகரங்களின் உச்சிகளில் மாத்திரம் தங்கி நிற்கிறது. அதுவும், கொஞ்சங் கொஞ்சமாக ஒதுங்கிவருகிறது. இதற்குள், வானத்தில் காத்திரமான நட்சத் திரங்கள் மெள்ளப் பிரகாசிக்க ஆரம்பிக்கின் றன. மேயப்போன எருமையோடு பசுவும் ஊருக்குள் மந்தை மந்தையாகத் திரும்புகிறது.

**மீன்புகழ் பெற,வெயில்**
**ஒதுங்க, மேதியோ(டு)**
**ஆன்புகக் கதிரவன்**
**அத்தம் புக்கனன் :**

சூரியன் அஸ்தகிரியாகிய கல்லும் கரடுமான மலைக்குள் பிரவேசிக்கிறான். என்ன தன்மை யில் பிரவேசிக்கிறான் ? ராமன் காட்டுக்குப் போவதைக் கண்கொண்டு பார்த்துச் சகிக்க முடியாத தன்மையில்தான்.

## கம்பர் யார்?

மீன்புகழ் பெற,வெயில்
ஒதுங்க, மேதியோ(டு)
ஆன்புகக் கதிரவன்
அத்தம் புக்கனன் :
கான்புகக் காண்கிலேன்
என்று கல்லிடைத்
தான்புக முடுகினன்
என்னும் தன்மையால். *

காட்சி கட்புலனை விட்டு அகலாது. செய்யுளில் உள்ள ஓசை செவிப்புலனை விட்டுப் போகாது. பாவமோ இதயத்தை விட்டு அகலவே அகலாது. இதுதான் கவி.

உலகக் காட்சிகள் எத்தனையோ வந்து நம் உள்ளத்தில் விழுகின்றன ; ஆனால் அப்படியே மறைந்தும்போகின்றன. கம்பரோ அவைகளை வார்த்தையிலும் இசையிலுமாகக் கட்டி வைத்து என்றென்றும் நிற்கும்படி செய்து விடுகிறார். கவிஞர் செய்கிற அற்புதம் இது.

---

*மீன் - நட்சத்திரங்கள். மேதி - எருமை. ஆன்- பசு. கல் - மலை.

## 2

# கம்பரும் மக்கள் இயல்பும்

பொதுவாக, புலவர்கள் கதை எழுதுவதானுல், பேருக்கு அதலம், பாதாளம் என்றெல்லாம் களம் வகுக்கலாம். ஆனுல் அவர்களுடைய மனமானது, தங்கள் சொந்த நாட்டையும் தாங்கள் உறவாடிவந்த மக்களையும் விட்டுப் போகமுடியாது. ஷேக்ஸ்பியர் இதர தேசத்துக் கதைகளைக் கையாண்டார். பெயர்கள் மாத்திரம் அந்தந்தத் தேசத்துக்கு உரியனவே ஒழிய, ஆடவரோ, பெண்டிரோ, நாட்டுப் பண்போ எல்லாம் அவருடைய

## கம்பர் யார்?

சொந்த ஆங்கில தேசத்துக்கே உரியன என்று ஆங்கிலேயர் சொல்வார்கள்.

கம்பரும், ராமாயணத்தைப் பாடியபோது, தமிழ்நாட்டை விட்டுப் போய்விடவில்லை. அவர் வகுத்திருக்கிற பாத்திரங்களும் தமிழ் நாட்டு மக்களே.

தசரதனும் அவனது சத்தியமும் தமிழ் நாட்டில் கண்டவை; சீதையும் கணவனை விட நெருங்கிய கேளிர் பிறர் இல்லையென்ற மனைமாட்சியும், இலக்குவனும் பரதனும் சத்துருக்கனும் சகோதரவாஞ்சையும், இங்கு இருந்தவையே. இராவணனும் அரக்கர்களும், இதர தேசங்களிலெல்லாம் இருந்ததுபோலத் தமிழ் நாட்டிலும் இருந்தார்கள். கல்லுகளுக் கிடையே மல்லிகை பூத்தமாதிரி, விபீஷணர் களும் தமிழ்நாட்டில் உண்டு. கோசலை சுமித் திரைகளோடு, கைகேசி, கூனி, சூர்ப்பனகை களும் சர்வ வியாபிகள்தான்.

## மக்கள் இயல்பு

இத்தனை வகைப்பட்ட மக்களையும் அவர்கள் இயல்புகளையும் கம்பர் எடுத்துக்காட்டும் போது, எல்லாம் நமக்குத் தெரிந்தவைகளாகத்தான் இருக்கின்றன. மக்களின் மனப்பாங்கு, சென்ற ஆயிர வருஷத்தில் மாறுபாடு அடைந்ததாக இல்லை. மக்கட்பண்பு, ஏதோ மாறுபடாத நித்திய வஸ்துப் போலவே தோன்றுகிறது.

ஆனாலும், ஒரு வித்தியாசம் உண்டு. முற்காலத்தில் வாழ்க்கையெல்லாம் கிராம வாழ்க்கையாகவே இருந்த்து. தற்காலத்திய நகர வாழ்க்கையும், சதா ரயில் தப்பிவிடுமோ என்கிற பரபரப்புப் பாவனையும் அப்போது கிடையாது. ஆண், பெண், மக்கள் இவர்கள் செயல்களை ஆர அமரப் பார்த்து அனுபவிக்கும் தன்மையாய் இருந்தது. அதனாலே அக்காலத்தவருடைய உணர்ச்சிக்கு மிகுதியான வலியுண்டு, ஆழமுண்டு. உணர்ச்சிகளின் வலியிலும் ஆழத்திலுந்தான் நமக்கும் பண்டைக் காலத்தவருக்கும் வித்தியாசம்.

அந்த உணர்ச்சி பாவத்தையெல்லாம் முத்துச் சலாபம் குளித்தமுறையில் முழுகிக் கண்டவர் கம்பர். கவியும் அதனுலே இதயத்தின் அடிப்படையான ஆழத்திலிருந்து வருகிறது. மேல்நாட்டார் இதைத்தான் 'கிளாஸிக்', அதாவது, இலக்கிய உயர்தனிப்பண்பு என்று சொல்வார்கள். இந்த உயர்தனிப்பண்பு, பண்டைக் காலத்தில்தான் சிறப்பாக இருந்ததென்று சொல்வார்கள். தமிழிலும் அப்படியேதான்.

இந்தப் பண்பானது, ஸ்தூலமான விஷயத்தை ஆராய்வதால் தெரியவராது. செய்யுளின் ஓட்டம், தாளங்கள் (இதை ஆங்கிலத்தில் ரிதும் என்பார்கள்) இவற்ருல் எப்படியோ நமக்குத் தெரிந்துவிடுகிறது.

ஆடை சம்பந்தமாகவும், குடியிருக்கும் வீடு சம்பந்தமாகவும், சவாரி செய்யும் வாகனம் சம்பந்தமாகவும் - அதாவது புறம்பான போர்வைகள் சம்பந்தமாக - நமக்கும் பண்டைக் காலத்தவருக்கும் ரொம்ப வேறுபாடு

உண்டு. ஆனால், உள்ளம் சம்பந்தமாக வேறுபாடில்லை என்றே தெரியவரும். அது எப்படி என்று பார்க்கலாம்.

* * * *

கல்வி விஷயமாக அக்காலத்து அறிவாளிகளின் நோக்கம் எப்படியிருந்தது என்பதைக் கம்பர் சொல்லுகிறார். சாமானிய மக்களின் அபிப்பிராயத்தைக் கவனிக்கவேண்டியதில்லையல்லவா ?

எல்லாருக்கும் எல்லா விஷயங்களையும் ஆராய்ந்தறிய வசதிகள் ஏற்படுமானால் எல்லோரும் அறிவாளிகளாய்த்தான் இருப்பார்கள். அந்த ஏற்பாட்டில் நிபுணர்கள் என்ற வர்க்கம் இல்லாமற் போய்விடும். இதை, 'ஒண்மை இல்லை பல் கேள்வி ஓங்கலால்' என்கிறார். ஒண்மை என்றால் நிபுணத்துவம். ஆங்கிலத்தில் 'ஜீனியஸ்' என்று இதைச் சொல்வார்கள்.

## கம்பர் யார் ?

இனி, பெண்கள் சம்பந்தமாகக் கல்வி எப்படி இருக்கவேண்டும் என்று எண்ணிஞர்கள் ?

பெண்கள், விசாலமான கண்ணும் பிறை போன்ற நெற்றியும் படைத்த பெண்கள். அவர்களுக்குக் குலத்தால் வந்த செல்வம் வளமாய் இருந்தது. அப்படியே இயற்கையோடு பயின்றுவந்த கல்வியும் வளமாய் இருந்தது. (ஏட்டுக்குள்ளும் வெறும் சொற்களுக்குள்ளும் வைத்து வேக்காடு கொடுத்துவந்த கனியல்ல, அவர்கள் பெற்றிருந்த கல்வி.) இதை,

**பெருந்த டங்கண்**
**பிறை நுத லார்க்கெலாம்**
**பொருந்து செல்வமும்**
**கல்வியும் பூத்தலால் -**

என்கிருர் கம்பர்.

இப்படி, செல்வமும் கல்வியும் இயற்கையாக நயம்பெற அமைந்திருந்ததால், அதாவது ‘பூத்தலால்’, என்ன பயன் விளைந்தது ?

## மக்கள் இயல்பு

**வருந்தி வந்தவர்க் கீதலும் :**

ஏழைகள் வந்தபோது தானதருமங்கள் செய்தார்கள் என்பது ஏற்பட்டது. மற்றப்படி, தினந்தோறும் நடப்பதென்ன ?

**வைகலும்**
**விருந்தும் அன்றி**
**விளைவன யாவையே ?**

இங்கே, ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. நூற்றைம்பது வருஷத்துக்குமுன் பிரான்ஸ் தேசத்தில் ஒரு பெண்மணி இருந்தாள். அவள் செல்வத்தினாலும் கல்வியினாலும் மிக மேம்பட்டவள். அதுகாரணமாக, ஐரோப்பா கண்டத்திலுள்ள சிறந்த புலவர்களும் ஆசிரியர்களும் அவளுடைய மாளிகையில் வந்து ஒன்றுகூடவும் சகல கலைகளையும் ஆராயவும் வசதி ஏற்பட்டது. அவளுடைய மாளிகை உலகப் பிரசித்திபெற்ற சங்கமாய் இருந்தது. பாண்டியன் மதுரையில் நடத்திய சங்கத்தை ஒத்தது என்று சொல்லலாம். அவள் பெயர் மாடம் - டி - ஸ்டீல்.

இந்தப் பெண்மணியை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, பாட்டைப் பார்க்கலாம்.

**பெருந்த டங்கண்**
**பிறை நுத லார்க்கெலாம்**
**பொருந்து செல்வமும்**
**கல்வியும் பூத்தலால்,**
**வருந்தி வந்தவர்க்**
**கீதலும் வைகலும்**
**விருந்தும் அன்றி**
**விளைவன யாவையே?**

இந்தச் செய்யுள் இன்றைக்கு - இந்த 1939-ம் வருஷத்தில் - நம் சகோதரிகள் சிலரைப் பார்த்து எழுதிய மாதிரிதான் இருக்கிறது.

* * *

இனி, மக்கள் செய்யும் தொழில் பற்றிய உணர்ச்சி எப்படி இருந்தது என்று பார்ப்போம்.

இந்த நாட்டுக்கு இன்றியமையாத தொழில்கள் உழவும் வர்த்தகமும். உழவுத் தொழிலுக்கும் வர்த்தகத் தொழிலுக்கும் சரியான

பாதுகாப்பு இல்லையென்றால் அவை நடைபெறவே முடியாது. கொள்ளைக்காரர்களை அடக்குவதற்கு வேண்டிய திறமைபெற்ற அரசன் இல்லை என்றால், யாராவது நிலத்தை உழுவார்களா? கடையும் கடைத்தெருவும் ஒரு நாள் இருக்கமுடியுமா?

நாட்டையும் நாட்டிலுள்ள சகல தொழில்களையும் திறம்படப் பாதுகாக்கவல்ல வீரனாகிய ராமன் நாட்டைவிட்டுக் காட்டுக்குப் போகிறான் என்றால் ஜனங்களுக்கு எவ்வளவு பயம், எவ்வளவு துயரம் உண்டாகும்? நாட்டில் லக்ஷ்மி தேவிக்கும் பூமாதேவிக்கும் இடமேது? இதைக் கம்பர் ‘பொன்திணி போதினாளும்’ (இலக்குமி தேவியும்), ‘பூமியும்’ (பூமாதேவியும்) ‘புலம்பி நைய’, ராமன் ராஜரீகத்தைத் துறந்து காட்டுக்குப் போகிறான் என்கிறார்.

சமாதான காலத்தில் இந்தத் தெய்வங்களுக்கு இவ்வளவு மதிப்பு உண்டு. ஆனால்,

யுத்த தேவதை பிரசன்னமாய்விட்டால், அவளுடைய சன்னிதியில் மேலே சொன்ன இலக்குமியும் பூமாதேவியும் அடிமைகள் தான். தற்காலத்து அரசியலிலெல்லாம் இந்த முறை தான் கையாளப்பட்டுவருகிறது. நாட்டின் வருவாயில் எவ்வளவு பெரும்பகுதி ராணுவத்துக்குப் போய்விடுகிறது என்கிற கணக்கு ஒன்றைப் பார்த்தால் போதும்.

கம்பர் காலத்திலே ராணுவம் சம்பந்தமாக இந்த முறையே அனுசரித்து வந்தார்கள். எப்படி என்று பார்ப்போம்.

லட்சுமணனுல் மூக்கு அறுபட்டவுடன் சூர்ப்பனகை கரனிடத்தில் போய் முறையிடுகிருள். ராமனைப் பல அரக்கர்கள் வந்து எதிர்க்கிருர்கள். திரிசிரன் என்ற போர் வீரனும் வந்து யுத்தம் செய்கிருன். அவன் மடிகிருன். அரக்கர்கள் எல்லோரும் பயந்து ஓட்டம்பிடிக்கிருர்கள். அச்சமயம் தூஷணன் என்ற வீரன் வந்து, ஓடுகிறவர்களைத் தடுத்து,

அவர்களுடைய வீர தர்மத்தைப்பற்றி மிகுந்த ஆவேசத்தோடு பேசுகிறுன் :

" அடே, நீங்கள் எல்லோரும் வீரர்களாச்சே. இந்த வீரத்தொழிலை விட்டுவிட்டுக் கேவலமான தொழிலுக்கா போகப் போகிறீர்கள் ?" என்று ஆர்ப்பரிக்கிறுன். " கேவலம் கடைவைத்துக் காலத்தைப் போக்கலாம் என்று எண்ணுகிறீர்களா ? வயிறு நிறையச் சாப்பிடலாம்தான். ஆனுல் அது ஒரு வாழ்க்கையா ? "

**ஆர வாழ்க்கையின்**
**வணிகராய் அமைதிரோ ?**

என்றுன். மேலும், " உங்கள் கையில் கூர்மையான வேலும், வீரச் செயலெல்லாம் செய்து வந்த வாளும் இருக்கின்றன. அவைகளை என்ன செய்யப் போகிறீர்கள் ? "

**அயில்வேல்**
**வீர வாட்கொடு**
**கொழுவடித் துழுதிரோ ?**

என்று கேட்கிறுன். உழவுத் தொழிலே

அவ்வளவு கேவலமாம். யாருக்கு? "ஒரே போர் வெறியில் வாழ்ந்துகொண்டிருக்கும் பகைவரான வீரர் கையிலிருந்து பறித்த வாளையல்லவா நீங்கள் கையிலேந்தியிருக்கிறீர்கள்! உங்களுக்கு உழவுத் தொழில் கேவலந்தான்" என்கிறான்.

**வெறிபோர்த்**
**தீர வாழ்க்கையின்**
**தெவ்வரைச் செருவிடைப்**
**பறித்த**
**வீர வாட்கையீர் !**

"வீர வாளைக் கையிலேந்தியவர்களே !" என்கிறான். பாட்டு முழுவதையும் பார்க்கலாம்:

**ஆர வாழ்க்கையின்**
**வணிகராய் அமைதிரோ ?**
**அயில்வேல்**
**வீர வாட்கொடு**
**கொழுவடித் துழுதிரோ ?**
**வெறிபோர்த்**

# மக்கள் இயல்பு

*தீர வாழ்க்கையின்*
*தெவ்வரைச் செருவிடைப்*
*பறித்த*
*வீர வாட்கையீர் !*
*எங்ஙனம் வாழ்திரோ ?*
*விளம்பீர் !*

யுத்த தேவதை கொலுவீற்றிருக்கும்போது இலக்குமி தேவியும் பூமாதேவியும் கேவலமாகத்தான் கருதப் படுவார்கள். யுத்தம் என்பது உலகத்தை விட்டு என்று நீங்குமோ அன்றுதான் உலகத்துக்குச் செல்வமும் க்ஷேமமும். அப்படி ஒரு ராஜ்யம் வேண்டும் என்பதே கம்பருடைய லட்சியம். அந்த ராஜ்யத்துக்குச் சக்கரவர்த்தி, கம்பர் உருவாக்கிய ராமன்.

# 3

## கம்பரும் நாடகப் பண்பும்

கம்ப ராமாயணம் ஒரே நாடகமயமாய் இருக்கிறதென்று சொன்னால் மிகையல்ல. நாடகத்துக்குரிய திரை ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டுமே இருக்கும். வைஷ்ணவ வியாக்கியான சம்பிரதாயத்தில் கம்ப ராமாயணத்தை, கம்ப நாடகம் என்றே சொல்வார்கள். தமிழ் மக்கள் மனசையும் மலையாளிகள் மனசையுமே சென்ற ஆயிர வருஷமாய் ஒரேபடியாய்க் கம்பராமாயணம்

கவர்ந்து வந்ததற்குக் காரணம், அதன் நாடகப் பண்பே.

நாடகத்தில் அனுபவிப்பது இரண்டு விஷயங்கள். ஒரு இதய **பா**வம் மற்ருெரு இதய **பா**வத்தைத் தாக்கும்போது எழுகிற சொல் ஒன்று. இரண்டாவது, செயல். செயலை மெய்ப்பாடு என்று தமிழ் ஆசிரியர்கள் சொல்வார்கள். இப்போது, சொல் எப்படி எழுகிறது என்பதற்கு ஒரு கட்டத்தைப் பார்க்கலாம்.

இலங்கையில் ராமருக்கும் ராவணனுக்கும் முதல்நாள் போர் நடந்தது. அதில் ராவணன் தோல்வியுற்றுத் தான் மாத்திரம் மிஞ்சி, வீட்டுக்குப் போய்ச் சேருகிருன். மறுநாள் கும்பகர்ணனை யுத்தத்திற்கு அனுப்புகிருன். கும்பகர்ணனுக்கு, தன் தமையன் ராவணன் செய்ததெல்லாம் குற்றம் என்று தெரிந்தாலும், அவனுக்காகத் தன் உயிரைக் கொடுப்பது கடமை என்று எண்ணுகிருன். அன்றையப் போரில் தான் மடிவது நிச்சயம் என்று

தெரியும். கடைசியாக ராவணனும் மடிவான் என்றும் தெரியும். ஆனால், இந்தத் துக்கமான மனநிலைக்குள் ஒரு திருப்திகரமான காரியமும் இருக்கிறது. தருமத்திற்கும் சத்தியத்திற்கும் இருப்பிடமாயுள்ள தன் அருமைத் தம்பி விபீஷணன் உயிர் வாழ்வான், அரக்கர் குலத்தை வாழ்விப்பான் என்ற எண்ணத்தில் அவனுக்கு ஒரு ஆனந்த உல்லாசமே இருந்தது.

இந்த நிலையில் யுத்தகளத்தில் நிற்கிறான். எதிரே நிற்பது லட்சுமணன். அவனுடைய மனநிலை இதற்கு நேர்மாறான மனநிலை யென்றே சொல்லலாம். சீதையை மீட்க வேண்டுமே, அதற்கு எவ்வித இடையூறும் வந்துவிடக்கூடாதே என்கிற ஒரே ஆத்திரம் தான் அவன் மனசில். இப்படியாக இரு வரும் போர்க்களத்தில் வந்து நிற்க, கும்ப கர்ணன் லட்சுமணனைப் பார்த்துச் சொல்கி றான். "வீரன் ராமனுடைய தம்பி நீ. வீரன் ராவணனுடைய தம்பி நான். நாம் இருவரும் இப்போது போர் செய்யப்போகிறோம். நாம்

செய்யும் போரைப் பார்ப்பதற்கு எத்தனையோ பேர் வந்து கூடியிருக்கிறார்கள். தேவர்களே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அவர்களுக்கெல்லாம் திருப்தி உண்டாகும்படியாக முதலில் வீர வார்த்தைகள் சில பேசி, அதன் பிறகு நல்ல மாதிரியாகப் போர் செய்யலாம்" என்று சொல்லிவிட்டு, முதலாகத் தான் பேச ஆரம்பிக்கிறான் :

"எங்கள் குலத்தில் மூன்று ஆண் பிள்ளைகள்தான் பிறந்தார்கள். பெண்ணில்லையே என்று பெற்றோர்கள் இடைவிடாது தவம் செய்து, தவம்செய்த காரணமாகக் கடைசியில் அருமையான ஒரு பெண் பிறந்தாள். என் அருமைத் தங்கையான அவள் ஒரு குற்றமும் செய்யவில்லை."

**பெய்தவத்தின் ஓர்**
**பெண்கொடி எம்உமை**
**பிறந்தாள் ;**
**செய்த குற்றம்ஒன்(று)**
**இல்லவள் ;**

"யாதொரு குற்றமும் செய்யாத ஒரு பெண்ணின் நாசியை நீ சிறுபிள்ளைத்தனமாகக் கோபப்பட்டுக் கொய்தாயல்லவா? உன்னுடைய வீரத்தை, அடடா, என்ன என்று சொல்லுகிறது!"

**செய்த குற்றம்ஒன்**
**றில்லவள் நாசிவெம்**
**சினத்தால்**
**கொய்த கொற்றவ?**

இதுவரை இகழ்ச்சி **பாவ**ம். இனி, கோபம் திடீரென்று வருவதைப் பார்க்கப்போகிறோம்.

**மற்றவள் கூந்தல்தொட்**
**டீர்த்த**
**கைத லத்திடை**
**வீழ்த்துவன்.**

கூந்தலைத் தொட்டிழுத்த செயல் ஞாபகத்துக்கு வரவும், கோபம் அப்படியே பொங்கி விடுகிறது. பாட்டைப் பார்ப்போம்:

**பெய்த வத்தின்ஓர்**
**பெண்கொடி எம்உமை**
**பிறந்தாள்**
**செய்த குற்றம்ஒன்**
**றில்லவள் நாசிவெம்**
**சினத்தால்**
**கொய்த கொற்றவ !**
**மற்றவள் கூந்தல்தொட்**
**டீர்த்த**
**கைதலத்திடை**
**வீழ்த்துவன், காக்குதி !**
**என்ருன்.**

"கூந்தலைத் தொட்டிழுத்த கையை இப்போது மண்ணில் விழச் செய்கிறேன். காத்துக்கொள்" என்று கோபத்தோடும் வீரத்தோடும் சொல்கிருன். இதற்கு மறுமொழியாக லட்சுமணன் என்ன சொல்லப் போகிருன் என்பதைப் பார்ப்போம்.

கும்பகர்ணனுடைய நிறம் இருட்டிலிருந்து ஒரு வர்ணச்சாயம் எடுத்துப் பூசிய மாதிரி இருந்தது. 'அல்' என்ருல் இருட்டு.

**அல்லி னுற்செய்த நிறத்தவன்**
**அனையது பகர ;**

மல்யுத்தம் என்கிற வஸ்துவைப் பிசைந்து செய்ததுபோல் இருந்ததாம் லட்சுமண னுடைய தோள் :

**மல்லி னுற்செய்த தோளவன் ;**

பதில் வார்த்தைகளாக, அதாவது மாற்றங்க ளாக, சொல்கிறுன் :

**மாற்றங்கள் நும்பால்**
**வில்லினுற் சொல்வ தல்லது ;**

" வீர லட்சுமி வெட்கும்படியாக, கோழைகள் செய்கிற மாதிரி, வாய்ப்பேச்சு வைத்துக் கொள்ளுகிற பள்ளிக்கூடத்தில் நான் படிக்க வில்லை, அப்பா " என்கிறுன்.

**அல்லி னுற்செய்த நிறத்தவன்**
**அனையது பகர,**
**மல்லி னுற்செய்த தோளவன்,**
**' மாற்றங்கள் நும்பால்**

வில்லி ஞற்சொல்வ தல்லது,
வெந்திறல் வெள்கச்
சொல்லி ஞற்சொலக் கற்றிலம்
யாம்'எனச் சொன்ஞன்.

இதில் ஒரு நகைச்சுவை இருந்தாலும், இதயத்துக்குள் பொங்குகிற ஆங்காரமானது அக்கினி மலைபோல் சுவாலைவிட்டு வீசுகிறது.

மேலே சொன்ன இரண்டு செய்யுள்களி லிருந்து, நாடகசம்பந்தமாகச் சொல் எப்படிப் பிறக்கிறது என்றும், அதனுடைய வேகம் என்னவென்றும் பார்த்தோம். இனி, சொல் இல்லாமல் உள்ளத்தில் உண்டான உணர்ச்சி பாவம் மெய்ப்பாடுகளாக எப்படி வெளியாகிறது என்பதையும் பார்க்கலாம்.

* * *

பரதன் பதினுன்கு வருஷமாக இராமன் எப்போது திரும்பிவருவான் என்றே ஏங்கிக் கொண்டிருக்கிறுன். இடையிடையே இராமன் திரும்பிவரவே மாட்டாஞே என்றும் எண்ணுகிறுன், பயப்படுகிறுன். "பதினுன்கு

வருஷமாகத் தம்பி ஆண்டுகொண்டிருக்கிருன். இனியும்தான் ஆளட்டுமே" என்று எண்ணி, வராமல் இருந்துவிடுவாஞே என்றெல்லாம் நினைத்து மனசைப் பலபல விதமாகத் துன் புறுத்திக்கொள்ளுகிருன். ஆனுலும், அயோத் தியிலுள்ள ஜனங்கள் எல்லோரும் ராமன் வர வேண்டுமென்று மனப்பூர்வமாகப் பிரார்த் தித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிருன். தானும் அப்படியே மனப்பூர்வமாகப் பிரார்த் திக்கிருன். இதெல்லாம் காரணமாக நம்பிக்கையும் உண்டாகிறது. இப்படியாக, நம்பிக்கையிலும் நம்பிக்கையின்மையிலுமாக, பரதனுடைய மனம் தத்தளித்துக் கொண் டிருக்கிறது.

கடைசியாக, இராமன் திரும்பி வரவேண் டிய நாளும் வந்துவிட்டது. பகல் முழுதும் எதிர்பார்த்தான். வரவில்லை. சரி, வரமாட் டான் என்ற நிச்சயத்துக்கு வந்து, தன்னைச் சேர்ந்தவர்களையெல்லாம் வரவழைத்து அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு,

இராமனிடத்தில் சொல்லிய உறுதிப்படி அக்கினிப் பிரவேசம் செய்யப் போகிறுன். சுற்றி நிற்கிறவர்களெல்லோரும் ஒரே துக்கத்தில் மூழ்கியவர்களாய், சிலைகள்போல நிற்கிறுர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் " வந்து விட்டான் ராமன் " என்று சொல்லிக் கொண்டு அனுமார் வந்து அக்கினிகுண்டத்தைத் தன் கைகளிஞல் அவித்துவிடுகிறுர். இந்த ஆனந்தச் செய்தியைக் கேட்டவுடன் பரதன் நிலை என்னவாயிற்று?

**வேதியர் தமைத்தொழும் ;**

அதாவது பக்கத்தில் நின்ற வேதியர்கள் காலில்போய் வீழ்ந்தான். என்ன எண்ணத்தோடு ? " நீங்கள் ராமன் வரவேண்டுமென்று பிரார்த்தித்தீர்கள். வந்துவிட்டான். உங்களுக்கு வந்தனம் " என்கிற பாவனையில் அவர்களை நமஸ்கரித்தான். இது இயற்கைதானே? பிறகு, மற்ருெரு புறம் நின்றுகொண்டிருந்த அரசர்கள் காலில் வீழ்ந்தான். அதாவது,

தனக்குக் கப்பங் கட்டுகிற சிற்றரசர்கள் காலில் வீழ்ந்தான். ஆனால், இதில் சம்பிர தாய விரோதம் இருப்பதால், கொஞ்சம் அறிவு மாருட்டம் உண்டென்றே தோன்றும்.

**வேதியர் தமைத்தொழும்**
**வேந்த ரைத்தொழும் ;**

இதற்கு மேல்,

**தாதியர் தமைத்தொழும் ;**

வேலைக்காரிகள் காலில் வீழ்ந்தான் என்ருர். இதோடு நிற்கவில்லை. ஆனந்த வெறியால் அறிவு மயங்கிப் போய்விட்ட தென்ற விஷயத்தை இன்னொரு காரியத்தை வைத்தும் பார்க்கிருேம். ஒரு தூணைப் பார்த் துத் தான்தான் அது என்று மயங்கி நமஸ் கரிக்கிருன். (குடிகாரன் லாந்தல் கல்லைப் பார்த்துத் தானே அங்கு நிற்கிறதாக எண்ணு கிறது நாம் சாமானியமாய்க் காணுகிற காரியம்.) இந்த நிலையில் பரதன் தன்னையே தொழுதான் என்கிருர்.

வேதியர் தமைத்தொழும்
　　வேந்த ரைத்தொழும்
தாதியர் தமைத்தொழும்
　　தன்னை யேதொழும்.

ஆகவே, எதையும் அவன் நேர்முகமாக உணர்ந்தபாடில்லை. சிறிது நேரம் உட்கார்ந்தே இருக்கிறான். பேச்சு ஒன்றுமில்லை. பிறகு ஒரு காரணமும் இல்லாமல் எழுந்து ஏதோ சுவரைப் பார்த்த வண்ணமாய் நின்றுகொண்டே இருக்கிறான். ஜன்னல் வழியாகக் கம்பர் இவ்வளவையும் பார்த்து விட்டு, 'ஆகா! சகோதர வாஞ்சையாகிய இந்தக் காதல் செய்கிற வேலை யெல்லாம் கள்ளு செய்கிற வேலையாகவே இருக்கிறது' என்று வியக்கிறார். இந்த வியப்பைக் கவியில் பார்ப்போம்.

வேதியர் தமைத்தொழும்
　　வேந்த ரைத்தொழும்
தாதியர் தமைத்தொழும்
　　தன்னை யேதொழும் ;

## கம்பர் யார்?

**ஏதும்ஒன் றறிகிலான்,**
**இருக்கும் நிற்குமால்;**
**காதல்என் றீதுமோர்**
**கள்ளின் தோற்றிற்றே!**

**ராமன்** வருகிறனென்ற சந்தோஷச் செய்தியைக் கேட்டதனுல் உள்ளத்தில் உண்டான ஆனந்தம் மேலே சொன்ன மெய்ப்பாடுகளாய் வெளிவரப் பார்க்கிறேம். நாடகத்தில் இது தான் முக்கியமான அம்சம். சொல்லும் மெய்ப்பாடும் இவையானுல், கம்ப ராமாயணத்தைக் **கம்ப நாடகம்** என்று சொன்னது ரொம்பவும் பொருத்தமான விஷயந் தானே?

# 4

# கம்பரும் உடல் வனப்பும்

உலகத்தில் அழகுள்ள பிராணிகள் எத்தனையோ இருக்கின்றன. பட்சிகள் என்றால் மயிலும் பஞ்சவர்ணக் கிளியும் எவ்வளவோ அழகுவாய்ந்தன. மிருகங்களில் மான், சிறுத்தை போன்ற பிராணிகள் மிக்க அழகு வாய்ந்தன. இவை போக, அராபியர்களிடத்தில் கேட்டால், குதிரை தான் எல்லாப் பிராணிகளையும்விட அழகு வாய்ந்தது என்று சொல்வார்கள். அராபியர்களின்

பாதி உடல் குதிரைதானே? நம்மிடம் கேட்டாலோ, நம் மனசைக் கவரத்தக்க அழகுள்ளது காளைதான் என்று சொல்வோம். காளையின் கொம்புகள், இருண்ட கண், நடக்கும்போது குழைந்து அசைகின்ற திமில், குஞ்சத்தோடு கூடிய வால், கண்ணுக்கு மையிட்ட மாதிரி வர்ணம் வைத்த மேனி, எல்லாம் நம்மவருக்கு அருமையான அழகு தான். பார்க்கப் பார்க்கச் சலிக்காத அழகு. இந்த அனுபவமானது கோவில் சன்னிதியில் நந்தியையும் மதில்கள்மேல் ரிஷபத்தையும் ஏற்றி அமைத்திருக்கிறது.

ஆனாலும், உண்மையில் நம்முடைய கண்ணுக்குப் பிராணிகள் எல்லாவற்றிலும் அழகு வாய்ந்த பிராணி, மனிதப்பிராணியே. ஆண், பெண், குழந்தைகள் போன்ற அழகுள்ள வேறு உருவத்தை மனுஷனுடைய கண் பார்க்கமுடியாது.

## உடல் வனப்பு

கம்பர், மக்களது உடல் வனப்பை எப்படி யெல்லாமோ பார்த்து அனுபவித்திருக்கிறார். கும்பகர்ணன் முதலானவர்களுடைய பருத்து உயர்ந்த கருமேனியைக் கண்டு களிக்கிறவர் அவர். தாடகையை வருணிக்கும்போது அவளுடைய கோர சொரூபத்தை அனுபவித்த மாதிரி அரம்பை முதலியோர் உருவத்தைத் தான் அவர் அனுபவிப்பாரா? உண்மையான காவியக் கண்ணுக்கு, சக்தி வாய்ந்ததெல் லாம் அழகுடையாகவே தோன்றும்.

இனி, சக்தியோடு உயர்ந்த மனப்பண்பும் சேர்ந்துவிட்டால், அந்த உடலுக்கு உண்டா கிற அழகு ரொம்பவும் மாற்று உயர்ந்ததாய்ப் போய்விடுகிறது.

இராமர், லட்சுமணர் இருவரும் உயர்ந்த உடற்பண்பும், உள்ளப்பண்பும் வாய்ந்த வர்கள். பொதுவாக உலகத்தில் இந்த இரண்டு பண்புகளும் ஒத்தபடி வாய்ந்தவர் கள் குறைவு. எக்காலத்திலும் குறைவுதான்.

கம்பர் இதையெல்லாம் நன்ருய்க் கண்டு களித்தவர். தம்முடைய லட்சியத்தை இது சம்பந்தமாக வெளியிடுவதற்கு, இராம லட்சுமணரை ஒரு மலையின் சிகரத்தில் நிறுத்துகிருர். அவர்களுடைய உயர்ந்த குணங்களையெல்லாம் அனுமார் வாயிலாகச் செவியாரக் கேட்ட சுக்கிரீவன் அவர்களைப் பார்க்கவருகிருன். வருகிற வழியில், ஏதோ மறைத்திருந்த மரத்தையோ பாறையையோ கடந்து திரும்பிய மாத்திரத்தில், ராம லட்சு மணர்களுடைய உருவத்தைத் திடீரென்று காண்கிருன். பிரமித்துப் போகிருன். பிறகு நெடுநேரம் அவர்களைப் பார்த்தவண்ணமாய் நிற்கிருன். பிரும்ம சிருஷ்டியில் இப்படியும் உண்டா என்று ஒரே அதிசயத்தில் மூழ்கு கிருன். அவர்களுடைய உருவத்தைப் பார்த்து மனுஷர் என்று எண்ணவே முடிய வில்லை. தேவர்களுக்கும் மேலான தேவர் தாமே மனுஷராக அவதரித்திருக்கிருர்கள் என்று நிச்சயிக்கிருன்.

## உடல் வனப்பு

**தேறினன் : அமரர்க்கெல் லாம்**
**தேவராம் தேவர்தா மே**
**மாறிஇப் பிறப்பில்வந் தார்**
**மானுட ராக,மன் னே !**

வீரன் ஒருவன், வீர தத்துவம் படைத்த சிறந்த உருவத்தைப் பார்த்துவிட்டால், அவனுக்கு வருகிற ஆனந்தத்தைச் சாமானிய மக்கள் உணரமுடியாது. இந்த ஆனந்தம் பின்வரும் சுக்கிரீவன் வார்த்தையில் எப்படி வருகிறது என்று பார்ப்போம்.

சிவபெருமான், பிரமன் ஆகிய தேவர்குழாமெல்லாம் சிறந்த உருவம் படைத்தவர்கள் என்று சொல்லுவது மரபுதான். ஆனால் இப்போது ஏற்பட்டுவிட்டது என்ன ?

**ஆறுகொள் சடிலத்தா னும்**
**அயனும்என் றிவர்களா தி**
**வேறுள குழுவைஎல் லாம்**
**மானுடம் வென்றதம் மா !**

இது உண்மையான பாவத்தைக் காட்டுகிறது.

*தேறினன் : அமரர்க்கெல் லாம்*
*தேவராம் தேவர்தா மே*
*மாறிஇப் பிறப்பில்வந் தார்*
*மானுட ராக,மன் னே!*
*ஆறுகொள் சடிலத்தா னும்*
*அயனும்என் றிவர்கள்ஆ தி*
*வேறுள குழுவைஎல் லாம்*
*மானுடம் வென்றதம் மா!*

இனி, பெண்களுடைய அழகு தனி, கோடிக்கணக்கான வருஷமாகப் பெண்ணின் அழகு ஒரு தனித் தத்துவமாக அங்கீகரித்து அனுபவிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதை அழகுத்தெய்வம் என்று சொல்வது பொருத்தந்தான். இந்த அழகுத்தெய்வம், ஆபரணங்களிலிருந்தும் காதில் அணிகிற குழைகளிலிருந்தும் மின்னுகிற ஒளியோடு நெடுகிலும் பிரகாசித்து வந்திருக்கிறது. பெண்களின் விசாலமான கருவிழிகளோடும் அவர்களுடைய குழைந்து நெகிழ்ந்த சாயல்களோடும் பழகி வந்திருக்கிறது. கூர்ந்து கவனிப்போமானல் இது ஏதோ உடலைவிட்டுத்

## உடல் வனப்பு

தனியாய் உலவுகிற தத்துவம் என்றே சொல்லத் தோன்றும்: பூவின் மணம் பூவை விட்டுத் தனிமையாய் உலவுகிற மாதிரி. இதைக்குறித்துக் கம்பர் சொல்லுகிற முறையைப் பார்க்கலாம்:

**இழைகளும் குழைகளும்**
**மின்ன, முன்னமே**
**மழைபொரு கண்ணிணை**
**மடந்தை மாரொடும்**
**பழகிய தெனினும்:**

இப்படியெல்லாம் பழகி இருந்தபோதிலும், சீதையின் அழகு என்றும் காணாத அழகாய்த் துலங்கிக்கொண்டிருந்ததால், அழகு என்று சொல்லப்பட்ட அந்த அழகுத்தெய்வத்துக்கு என்ன நேர்ந்தது என்பதைப் பாட்டில் பார்க்கலாம்.

**இழைகளும் குழைகளும்**
**மின்ன, முன்னமே**
**மழைபொரு கண்ணிணை**
**மடந்தை மாரொடும்**

## கம்பர் யார்?

பழகிய தெனினும்,இப்
பாவை தோன்றலால்
அழகெனும் அழகும்ஓர்
அழகு பெற்றதே!

ஆனந்தத்திலும் சிருங்காரத்திலும் கலியாண கோலத்திலும் திகழ்ந்த சீதையின் அழகை இப்போது பார்த்தோம். இனி, வேறொரு நிலையில் பார்ப்போம்.

இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போய் இலங்கையிலே அசோகவனத்தில் சிறை வைத்து விடுகிறான். அவளை மணக்கப் பல நாளும் எவ்வளவோ முயல்கிறான். அவள் அவனைத் துச்சமாகவே எண்ணி ஒவ்வொரு நாளும் ஓட்டிவிடுகிறாள். அவளுடைய இதயம் ஒரே சோகத்தில் ராமர் வந்து தன்னை மீட்பார் என்ற நம்பிக்கையற்ற நிலைமையில் இருக்கிறது. தேகமெல்லாம் வெகுவாக மெலிவுற்றும், மனம் மாத்திரம் ஒரு அபார சக்தியை வாய்ந்ததா யிருக்கிறது. இந்த நிலையைத் தானே தவம் என்று சொல்ல வேண்டும்? இப்படி இருக்கிற சீதையை அனுமார் வந்து

பார்க்கிறார். இந்தத் தவக் கோலத்தில் ஒரு சோதி, அதாவது ஒரு அழகு, பிரகாசிப்பதைப் பார்த்து வியக்கிறார்.

சீதையினுடைய அதிசயமான பண்புகளை வைத்தே பெண் தன்மை ஆண் தன்மையை விட எவ்வளவோ சிறந்துவிட்டது. பெரிய குடியில் பிறந்தவர்களிடத்தில் சிறந்த பண்பு கள் உண்டு. அவைகளும் சீதையை வைத்தே உயர்ந்துவிட்டன. குடிப்பிறப்பாகிய தெய்வம் சீதையை எடுத்து வளர்க்கப் பாக்கியம் பெற் றது. நாயகனிடத்து வைத்துள்ள தெய்விகக் காதலும் அதோடு ஒட்டிய நாணமும் எவ்வளவு வியக்கத்தக்கவையா யிருக்கின்றன என்று அனுமார் எண்ணுகிறார் :

**பேணநோற் றதுமனைப்**
**பிறவி ; பெண்மைபோல்**
**நாணம்நோற் றுயர்ந்தது**
**நங்கை தோன்றலால்.**

சீதை ஒருத்தி அவதரித்ததால், பெண்மை, குடிப்பிறப்பு, நாணம் எல்லாம் உயர்ந்து

விட்டன. இனி, இவளுடைய அருந்தவத்தி லிருந்து உண்டாகிற தெய்விக அழகை யெல்லாம் கண்டு அனுபவிப்பதற்கு ராமன் இங்கில்லையேயென்று மேலும் வருந்துகிறார் :

**பேணநோற் றதுமனைப்**
**பிறவி ; பெண்மைபோல்**
**நாணம்நோற் றுயர்ந்தது**
**நங்கை தோன்றலால் ;**
**மாணநோற் றீண்டிவள்**
**இருந்த ஆறெலாம்**
**காணநோற் றிலஅவன்**
**கமலக் கண்களே !**

மாதர்களுடைய உருவத்தின் அழகை சிருங்காரக் கண்ணாடி மூலமாகவும் சோகக் கண்ணாடி மூலமாகவும் பார்க்கிறோம். ஒரு புண்ணியவதியின் சோகத்தின் மூலமாகப் பார்க்கிற அழகே மிகச் சிறந்தது.

3462

# 5

# கம்பரும் நீதிநெறியும்

சத்தியமானது மனிதனுடைய இரத்தத்தோடும் உணர்ச்சியோடும் ஒட்டிக் கிடக்கிறது. சத்தியத்துக்காக, உலகத்தில் (ஏதோ கதைகளில் அல்ல) உயிரை விட்டவர்கள் எத்தனையோ பேர். சூரியனைச் சுற்றித் தான் பூமி ஓடுகிறது என்ற உண்மையை, கலிலியோ என்ற நிபுணர் கண்டார். இந்த உண்மையை மறுத்துச் சொல்லவேண்டுமென்று அரசாங்கத்தார் அவரை எவ்வளவோ வற்புறுத்தினார்கள். அது காரணமாக

எவ்வளவோ அவரும் கஷ்டப்பட்டார். புருஞே என்ற இன்ஞெரு பெரியார் இந்த உண்மையை மறுத்துச் சொல்ல இயலாமல் அக்கினிக்கு இரையானுர். பெரியோர்களைச் சொல்வானேன்? சாமானிய ஜனங்கள்கூடப் பொய் சொல்ல இயலாமல் கஷ்டத்திற்கு உள்ளாவதை இன்னும் பார்க்கிரும்.

சத்தியத்துக்கு விரோதமாக வாய் பேசுகிற தென்ருல், இதயத்தைக் கத்தியினுல் அறுத்து வெளியே எடுக்கிற கணக்குத்தான். ஆனுலும் தற்காலத்து அரசியல், வழக்கியல், வியாபார இயல், பத்திரிகை இயல், இவைகள் காரணமாக, மேலே சொன்ன இயற்கை உணர்ச்சிதான் உண்டோ இல்லையோ என்று சந்தேகிக்கக்கூட இடமுண்டாகிறது.

ஆயிரம் வருஷத்துக்குமுன், அதாவது, கம்பர் காலத்தில், சத்தியத்தை எதிர்ப்பதற்கு இத்தனை படைகள் கிடையாது. சத்திய தருமத்தின் ஆழமான அடிப்படையைக் கண்டு

அறிவதற்கு எத்தனை எத்தனையோ மக்கள் இருந்தார்கள் ; சந்தர்ப்பங்களும் இருந்தன. இப்படிக் கண்ட உண்மையைத் தசரதன் என்ற பாத்திரத்தைக் கொண்டு நமக்குக் காட்டுகிறார் கம்பர். ஏதோ ஒரு அரிய நெருக்கடியான சந்தர்ப்பத்தில், தனக்கு உற்ற துணையாய் நின்ற காரணத்தால், தசரதன் கைகேசிக்கு இரண்டு வரம் அளித்து விடுகிறான். பல வருஷங்கள் கழிந்து அந்த இரண்டு வரங்களையும் மனசுக்குக் கொண்டுவந்து கைகேசியானவள், மிக்க அடத்தோடு, அவைகளைத் தனக்குக் கொடுத்துவிடும்படி தசரதனிடம் கேட்கிறாள். விஷயம் தெரியாமல் தசரதன் சரி என்று ஒப்புக்கொள்கிறான். உறுதி வாங்கியதும், பரதனுக்குப் பட்டம் கட்டவேண்டியது ஒன்று, மற்றது இராமனைக் காட்டுக்கு அனுப்பவேண்டியது என்று அவனிடம் சொல்லுகிறாள். இதுவரையும் குணவதியாய் இருந்தவள் இப்படி அநீதியானதும், கொடியதுமான காரியங்களை வேண்டுகிறாள் என்பதைத் தசரதனால்

நம்பவே முடியவில்லே. அவளிடம் எவ்வள வெல்லாமோ அவன் நயந்து பேசிப் பார்க்கிருன். அவள் கொஞ்சமாவது இணங்குகிற மாதிரி யில்லே. தசரதனுக்கு மனம் இடிந்து போகிறது. மறுத்துச் சொல்லவும் முடிய வில்லே. அவன் நிலேமை எப்படி இருந்தது?

**ஆகொடி யாய்எனும்**
**ஆவி காலும்!**

உயிர் போகிற அவஸ்தையிலே இருக்கிருன். அப்போது, அறிவு மயங்கிப்போய், நீதியே கொடியதொரு காரியம் என்றுகூட மனசில் தோன்றுகிறது.

**அந்தோ**
**ஓகொடி தேஅறம்**
**என்னும்; உண்மை முற்றும்**
**சாகள ளுளமும்;**

சத்தியமே செத்து ஒழியட்டும் என்று தோன்றுகிறது. ஆனுல், நீதியைப்பற்றியும் சத்தியத்தைப்பற்றியும் இப்படி எண்ணின

மாத்திரத்தில், தசரதனுக்கு அந்த எண்ணத்தையே சகிக்கமுடியவில்லை. அதனால்,

**மெய்தள் ளாடிவீழும்.**

இவ்வளவு மனச்சோர்வுக்கும் உள்ளானவன் யார்? சாமானிய மனுஷனா? வானத்தையும் (மாகம்), பாதாளத்தையும் (நாகம்), இந்த உலகத்தையுமே வென்ற மகாவீரனான தசரதன்தான்.

**ஆகொடி யாய்எனும்**
**ஆவி காலும்;அந் தோ**
**ஓகொடி தேஅறம்**
**என்னும்; உண்மைமுற் றும்**
**சாக, எ னாஎழும்;**
**மெய்தள் ளாடிவீ ழும்**
**மாகமும் நாகமும்**
**மண்ணும் வென்றவா ளான்!**

இதிலிருந்து, சத்திய தருமம் உள்ளத்திலிருந்து எவ்விதமாக வேலை செய்கிறது என்பது தெரிகிறது. இனி, வாய்ச்சொல்லில்

மாத்திரம் அல்ல, செயலிலும் மனம் கட்டுப் பட்டே கிடக்கிறது. அதுதான் நீதிதருமம். ஒழுங்குக்கு மாருக ஒன்றைச் செய்வதைப் போல் வெறுப்பான காரியம் வேருென்றும் கிடையாது, நேர்மையுள்ள மனசுக்கு.

*　　　*　　　*

**ப**ரதன், பிறந்ததுமுதல் என்று சொல்லக் கூடியவிதமாக,சிறுபிராயத்திலேயே நீதியைப் பாராட்டிவந்தான். நீதியின்படியே எல்லாத் துறைகளிலும் ஒழுகி வந்தான். சக்கரவர்த்தி யாய் இராமன் இல்லாமல், தான் இருக்கலாம் என்ற எண்ணமே கசப்பாய் இருக்கிறது அவ னுக்கு. இதெல்லாம் பின்னுல் நடக்கப்போகிற காரியமாய் இருந்தாலும், பாலப் பருவத்தி லேயே இந்த நீதிதருமம் அவனிடத்தில் வெளியாயிற்று என்று கம்பர் குறிக்கிருர்.

**வி**சுவாமித்திரர் மிதிலைக்கு இராம லட்சுமணர்களை அழைத்துக்கொண்டு போன போது, ஜனகனிடத்தில் இராமனை இன்னுன்

என்று அறிமுகப்படுத்தியபின், அவன் தம்பி பரதனைப்பற்றிச் சொல்லுகிறார்.

ஒவ்வொருவர் ஒவ்வொரு துறையில் நீதியாக நடக்கிறதை நாம் பார்க்கிறோம். மற்றத் துறைகளில் அவ்வளவு உறுதியாக அவர்கள் இருப்பதில்லை. க்ஷத்திரிய தர்மம், வியாபார தர்மம், தொழில் ஒழுங்கு என்று மக்கள் வைத்துக்கொள்ளுவதிலிருந்தே, இதர காரியங்களில் அவ்வளவு நிர்ப்பந்தங்கள் இல்லை என்று தெரிகிறதல்லவா? ஆனால், பரதன் எந்தத் துறையிலுமே நீதியை உறுதியாகப் பற்றி யிருந்தான் என்று ஜனகனிடத்தில் விசுவாமித்திரர் சொல்லுகிறார்.

கிளை நதிகளுடன் கூடிவரும் பெரிய ஆறு, கடைசியாகச் சமுத்திரத்தில் அடங்குவதை நாம் காண்கிறோம்.

**தள்ளரிய பெருநீதித்**
**தனியாறு புகமண்டும்**
**பள்ளம்எனும் தகையானை,**
**பரதன்எனும் பெயரானை**

என்று கூறுகிறார். பரதன் இராமனையே எல்லாவிதத்திலும் ஒத்திருந்தான். ஆனாலும், நீதிதருமமானது அவனுக்குத் தனிச் சிறப்பாக அவனுடைய பண்பை அலங்கரித்தது என்பதுதான் குறிப்பு:

**தள்ளரிய பெருநீதித்**
**தனியாறு புகமண்டும்**
**பள்ளம்எனும் தகையானைப்**
**பரதன்எனும் பெயரானை**
**எள்ளரிய குணத்தாலும்**
**எழிலாலும் இவ்விருந்த**
**வள்ளலையே அனையானைக்**
**கேகயர்கோன் மகள்பயந்தாள்.**

* * *

இனி, இந்த நீதிதருமத்துக்கும் மேலான தருமம் ஒன்று உண்டு. அதாவது காருண்யம். நியாய உணர்ச்சிக்குள் கட்டுப்பட்டுள்ள ஒருவன் அநியாய உலகத்தில் அகப்பட்டுக்கொண்டால், அவன் மனசுக்கு அதுபோல் துன்பம் கொடுக்கக்கூடியது வேறொன்றில்லை. இந்த

நிலைமையில்தான் விபீஷணன் இருந்தான். அவன் இராவணனையும் அவனோடு ஒத்துப்பாடுகிற அரக்கர்களையும் விட்டுவிட்டு அவர்களுடைய எதிரியாகிய ராமனிடம் அடைக்கலம்புக வருகின்றான். "எதிரிதானே, அரக்கன்தானே, பிறவிக்குணம் போகாது" என்றெல்லாம் சொல்லி, உடன்நின்றவர்கள் அவனைச் சேர்க்கக்கூடாது என்றவிதமாக ராமனிடம் வாதாடுகிறார்கள். அதை யெல்லாம் பொருட்படுத்தவில்லை ராமன். விபீஷணனுடைய நிலையை உண்மையில் உணர்ந்துகொண்டு, விபீஷணனை எப்படிக் கருதவேண்டும் என்று எடுத்துச் சொல்லு கிறான்.

### இன்றுவந் தான்என்றுண் டோ?

மேலும், என்னைப் பெற்ற தந்தையை, தாயை, எனக்குத் தமையன் இருந்தால் அந்தத் தமையனைத்தான்,

## கம்பர் யார்?

எந்தையை யாயைமுன் னைக்
கொன்றுவந் தான்என்றுண் டோ?
புகலது கூறுகின் றான்.

அவன் பழமையான நண்பனுக்கு மேலான வன்.

தொன்றுவந் தன்புபே ணும்
துணைவனும் அவனே!

பிறகு, நமக்கு விரோதமாகத் திரும்பி விடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அதனால் நமக்கென்ன நஷ்டம்?

பின் னைப்
பின்றும்என் றாலும்நம் பால்
புகழன்றிப் பிறிதும்உண் டோ?

நீதியிலெல்லாம் நீதி இந்த மனப்பாங்கு தான் என்று கதாநாயகனாகிய ராமன் மூல மாக நமக்கு விளக்குகிறார் கம்பர்.

## 6

# கம்பரும் அவதார தத்துவமும்

கம்பருடைய கவிநயம் என்பதையொட்டி இதுவரை ஐந்து விஷயங்களை ஒரு வகையாக ஆராய்ந்து பார்த்தோம். உலகக் காட்சிகள், மக்கள் இயல்பு, நாடகப் பண்பு, உடல் வனப்பு, நீதிநெறி என்பன அவை. இன்று, ஆருவதாக, அவதாரதத்துவம் என்னும் விஷயத்தைக் கொஞ்சம் பார்க்கலாம்.

நெடுகிலும், இதர தேசங்களிலுமேதான், ஞானிகள் பிறந்திருக்கிறார்கள். சாமானியமாக உலகில் காண்கிற காட்சிக்குப் பின்னால் வேறொரு காட்சி உண்டென்பதை உணர்ந்தவர்கள் அந்த ஞானிகள். எல்லாம் ஒன்று என்று காண்கிற காட்சிதான் அது. பல ஆயிர வருஷங்களாக நம்மவர் இந்த உண்மையை நேரில் கண்டு அனுபவித்திருக்கிறார்கள்.

தற்காலத்து மேல்நாட்டு அறிவியல்க் கலைகளும், இந்த உண்மையை ஒட்டியே முடிவு கட்டுகின்றன.

உலகத்தில் காணப்படும் பொருள்கள் எவ்வளவோ வேறுபட்டிருந்தாலும் - கல்லோ, புல்லோ, மனிதனோ - எல்லாம் சுமார் தொண்ணூறு வகைப்பட்ட அணுக்களாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றன. அணுவையே ஆராய்ந்து பார்த்தால், அதுவும் அதிநுட்பமான எண்ணிறந்த துகள்களால்

ஆக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிய வரும். இந்தத் துகள்களில் அவ்வளவாக வேறுபாடு ஒன்றும் இல்லை. ஆகவே, எல்லாப் பொருள்களும் அடிப்படையாகப் பார்க்கும் போது ஒன்றுதான். இந்த பேதமற்ற பொருள், இங்குண்டு அங்கில்லை என்று சொல்லமுடியாதபடி, எங்குமே வியாபித்த தாய் உள்ளது. இந்த விஷயத்தைக் கம்பர் பாடிய கவி ஒன்று எப்படி எடுத்துச்சொல்லு கிறது என்பதைப் பார்க்கலாம்.

* * *

தனக்கு ஏற்பட்ட செல்வத்தினுல்தான், அதாவது பொன்னினுல்தான், எல்லாக் காரியங்களும் நடக்கின்றன என்று எண்ணு கிருன் இரணியன். (இரணியம் - பொன்.) அதனுல், எல்லாக் காரியங்களையும் தானே செய்துமுடிப்பதாக எண்ணுகிருன். கடவுள் என்பது கிடையாது என்றும் சொல்லுகிருன். அவனுடைய மகன் பிரகலாதனே, பிறவியி லேயே ஞானி. அவன் இரணியனைப் பார்த்து

எல்லாப் பொருள்களிலும், எல்லா நிகழ்ச்சி களிலுமே கடவுள் ஒருவன்தான் இருக்கிறன் என்றவிதமாகப் பேசுகிறன்.

ஒரு சாண் இடத்திலும் இருக்கிறன் கடவுள். கட்டிடத்துக்குச் செங்கல்போல, சிருஷ்டிப் பொருள்களுக்கு அடிப்படையா யுள்ள ஒற்றைத்தன்மை வாய்ந்த அணுவில் மாத்திரமல்ல, அதை நூறு பாகமாக (சத கூருகப்) பிரித்தால் அந்தப் பாகத்திலும் (கோணிலும்) அவன் இருக்கிறன்.

**சாணினும் உளன், ஓர்தன் மை**
**அ ணுவினைச் சதகூ றிட் ட**
**கோணினும் உளன், மாமே ருக்**
**குன்றினும் உளன், இந்நின் ற**
**தூணினும் உளன்.**

பக்கத்தில் நின்ற தூணைச் சுட்டிக் காட்டினன். ஆனல், அதோடு நிற்கவில்லை. இரணியனிடத்திலுந்தான் கடவுள் அமைந்து விளையாடுகிறன். கடவுள் ஒருவன் கிடையாது

என்று இரணியன் சொன்னபோது, அப்படி அவன் சொன்னதும் கடவுள்தான் என்று உறுதியாகப் பிரகலாதன் சொல்லுகிறான்.

**இந்நின்ற**
**தூணினும் உளன், நீசொன்ன**
**சொல்லினும் உளன் இத்தன்மை**
**காணுதி விரைவின் என்றான்.**

இப்படிப் பிரகலாதன் சொன்னது சிரிப்பை உண்டாக்கிவிட்டது இரணியனுக்கு.

**சாணினும் உளன், ஓர்தன்மை**
**அணுவினைச் சதகூறிட்ட**
**கோணினும் உளன், மாமேருக்**
**குன்றினும் உளன், இந்நின்ற**
**தூணினும் உளன், நீசொன்ன**
**சொல்லினும் உளன், இத்தன்மை**
**காணுதி விரைவின் என்றான்:**
**நன்றெனக் கனகன் நக்கான்.***

ரொம்ப பேஷ் என்று இரணியன் சிரித்தானும்.

---

*கனகன் - இரணியன்; கனகம் - பொன்.

இந்தப் பாட்டிலிருந்து அறியாமையும் ஆணவச்செருக்கும் நிறைந்த ஒரு மனுஷனையே கடவுளின் அம்சமாகக் கருதவேண்டும் என்பது தெரிகிறது. அறிவினாலும் குணத்தினாலும் ஒருவன் அபூர்வமாக விளங்கி விடுவானானால், அவனைத் தெய்வாம்சம் என்று சொல்லுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? கடவுளையும் கடவுள்த் தத்துவங்களையும் சதா சிந்தித்துக்கொண்டிருக்கும் மனசுக்கு, அந்த அபூர்வ குணங்கள் அமைந்த மனுஷன் தெய்வம் என்றே தோன்றுவது இயல்பு. இதை ஒரு கவி மூலமாகப் பார்க்கலாம்.

* * *

தசரதன் ராஜரீகத்தைத் துறக்க எண்ணுகிறான். வசிஷ்டர் முதலான மந்திரிகளைச் சபைக்கு வரச்செய்கிறான். வசிஷ்டரைப் பார்த்து, "ராஜ்யத்தையும் குடிகளையும் ராமன் செவ்வையாகப் பாதுகாப்பான் அல்லவா? உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்கிறான். அதற்கு வசிஷ்டர் பதில்சொல்கிறார்:

## அவதார தத்துவம்

"தருமதேவதையே ராமனாக வந்து அவதரித்தது என்று சொல்லுவதைவிட்டு வேறு என்ன சொல்லக் கிடக்கிறது?"

**புறத்து நாம்ஒரு**
**பொருள்இனிப் புகலுவ(து)**
**எவனோ?**
**அறத்தின் மூர்த்திவந்(து)**
**அவதரித் தான்என்ப**
**தல்லால்,**

என்று சொல்லிவிட்டு, கடவுளின் சக்திகளையே விளக்க ஆரம்பிக்கிறார்: சூரியன், சந்திரன், பூமி, புல்பூண்டுகள், மனுஷன் ஈறாக உள்ள ஜீவப் பிராணிகள் எல்லாம் கோடிக்கணக்கான யுகங்களாகச் செவ்வையாகவே உலகத்தில் நடைபெற்று வருகின்றன. உற்பத்தி தத்துவமும், பாதுகாப்புத் தத்துவமும், பழையன ஒழிந்து புதியன வருவதற்கு இடம்பண்ணும் சம்ஹார தத்துவமும் சேர்ந்து உலகத்தைச் செவ்வையாக அமைத்து வைத்திருக்கின்றன. இயற்கையில் இவ்வளவு

திருத்தம் இருந்தாலும், இயற்கையையே தம் வசப்படுத்தி அதைத் திருத்தக்கூடிய பேரறிவும் சக்தியும் வாய்ந்த மனுஷர்களும் உண்டு. ராமன் அத்தகைய சக்தி வாய்ந்தவன் என்று வசிஷ்டர் சொல்லுகிறார்.

**பிறத்து, யாவையும்**
**காத்(து)அவை பின்னுறத்**
**துடைக்கும்**
**திறத்து மூவரும்**
**திருத்திய திருத்தும்அத்**
**திறலோன்.**

கடவுள் தத்துவத்திலேயே மனசைத் திளைக்கச் செய்துகொண்டிருக்கும் வசிஷ்டர், ராமனைக் கடவுள் அம்சம் என்று எண்ணுவதிலும் சொல்லுவதிலும் பொருத்தம் இருக்கிறது, உண்மையும் இருக்கிறது.

---

*பிறத்து - பிறப்பித்து, தோற்றுவித்து. மூவர் - பிரம விஷ்ணு ருத்திரர்.

## அவதார தத்துவம்

இனி, ராமனிடத்தில் அபார பக்தி செலுத்துகிற பாத்திரம் ஒன்று எப்படிப் பேசுகிறது என்று பார்க்கலாம்.

*　　　*　　　*

அனுமாரைப் பார்த்து "இங்கே உன்னை அனுப்பியது யார்?" என்று ராவணன் கேட்டபோது, அனுமார் உத்தரம்சொல்லு கிற கட்டம். அனுமார் என்றால் தொண்டு செய்து விளைந்த பக்திதான். குழந்தைக்குத் தொண்டு செய்து செய்து விளைந்த தாயின் அன்புபோல என்று ஒருவகையாகச் சொல்ல லாம். ராமனுடைய குணங்களை எண்ணும் போது அவருக்குக் கடவுளை எண்ணும லிருக்க முடியவில்லை. ராமன் கடவுளாகவே ஆய்விடுகிறான். கடவுள்த் தத்துவங்களை எப்படி அனுமார் கையாளுகிறார் என்று பார்க்கலாம்.

நியதியானது (இதை மேல்நாட்டார் 'லா' என்பார்கள்) ஆதியில் உண்டாக்கப்பட்டது. அதுவே எல்லாச் சிருஷ்டிகளையும் நடத்திக்

கொண்டு வருகிறது. இன்னும் ஒரே ஒழுங்கில் நடத்திக்கொண்டே போகும். எல்லாம் ஒரே ஒழுங்கில் நடைபெறுவதால் இடையில் உள்ளதும் முடிவில் உள்ளதும் ஆதியில் கடவுள் சன்னிதியில் விரிந்து கிடப்பதென்று ஆகும். அதனுல், முற்காலம், தற்காலம், வருங்காலம் என்னும் கால தத்துவம் இல்லாமல் போய்விடுகிறது. கடவுள், மூன்று காலத்தையும் கடந்தவனுகிருன். அன்றியும், நீளம், அகலம், உயரம் என்ற கணக்குக்கு உட்பட்டவனும் அல்ல. இனி, ஆயிர வருஷமாய் நிற்கிற ஆலமரத்துக்கு, வித்திலிருந்து முளைக்கிறது என்றும், வளர்ந்து முதிர்கிறது என்றும், கடைசியில் இற்றுப்போகிறதென்றும் உண்டு. கடவுளுக்கு இவை கிடையாது. என்றென்றும் பூரண நிலை ஒன்றே ஒழிய வேறில்லை.

**மூலமும் நடுவும்ஈ றும்**
**இல்லதோர், மும்மைத்தா ய**
**காலமும் கணக்கும்நீத் த**
**காரணன் :**

## அவதார தத்துவம்

இந்தத் தன்மையான கடவுள் என்ன செய்தான்? சிவபெருமானுக்குரிய திரிசூலத்தையும், திருமாலுக்குரிய சக்கரம் சங்கம் இரண்டையும், பிரும்மாவுக்கு உரிய கமண்டலத்தையும் துறந்து, கையில் வில்லை ஏந்தி வந்தான்.

**கைவில்ஏந் திச்**
**சூலமும், திகிரிசங் கும்,**
**கரகமுந் துறந்து ;**

இவைகளைவிட்டு மும்மூர்த்திகளின் இருப்பிடங்களையும் விட்டு வந்தான். ஒன்றாகிய கடவுள் தத்துவந்தானே மூன்று வகையாகத் தொழிற்படுகிறது என்பது குறிப்பு.

இப்போது பாட்டைப் பார்க்கலாம் :

**மூலமும் நடுவும்ஈ றும்**
**இல்லதோர் மும்மைத்தா ய**
**காலமும் கணக்கும்நீத் த**
**காரணன், கைவில்ஏந் திச்**

## கம்பர் யார்?

சூலமும் திகிரிசங் கும்
கரகமும் துறந்து,தொல் லை
ஆலமும் மலரும்வெள் ளிப்
பொருப்பும்விட் டயோத்திவந் தான். *

**கா**லம் கடந்த, எங்கும் நிறைந்த கடவுளே அயோத்தியில் வந்து அவதரித்தான் என்று பக்தன் சொல்லும்போது உண்மையே தொனிக்கிறது. இந்தவிதமாகப் பெரியோர் களை, அதாவது வீரர்களைக் கடவுளாகக் கரு தக்கூடிய சக்தி பூர்வகாலத்து ஜனங்களிடம் மிகுதியாகஇருந்தது என்று ஆசிரியர் கார்லைல் சொல்லுகிறார். அவர்களே பாக்கியசாலிகள், உயர்ந்த பதவியிலுள்ளவர்கள் என்றும் சொல்லுகிறார். அனுமாருடைய வாயிலாகக் கம்பர் சொல்லுகிற வீர வழிபாட்டின் வேகத்தை உணர முடியும் என்றிருந்தால்,

*ஆலம் - பாற்கடலில் மிதக்கும் ஆலிலை. மலர் - தாமரை. வெள்ளிப் பொருப்பு - கயிலை.

## அவதார தத்துவம்

ஆசிரியர் கார்லைல் எவ்வளவோ பாராட்டி அனுபவித்திருப்பார். ஆனுல், அவருக்கு அது கொடுத்து வைக்கவில்லை. தமிழர்களாகிய நமக்குக் கொடுத்துவைத்திருக்கிறது.

கம்பரோடு நாம் எல்லோரும் ஆறு தினங்களாகப் பழகிவந்தோம். ரொம்ப சந்தோஷம்.

# 7

## கம்பர் கவிக்கு வந்த வினை

ஒரு கதை, புராதனமான கதைதான்: கம்பர் ஒரு ஊருக்குப் போயிருந்தார். ஒரு பிரபுவுடன் தங்கியிருந்தார். சாயங்காலம் ஆனதும், "யாரோ ஒரு புலவர் கோயிலில் கம்ப ராமாயணப் பிரசங்கம் செய்கிறார், நாமும் போய்க் கேட்டு வரலாமே" என்றார் பிரபு. கம்பரும் சம்மதித்தார். இருவரும் போய்ப் பிரசங்கிக்குமுன் உட்கார்ந்து கொண்டார்கள். கம்பரை இனந் தெரியாததால்,

பிரசங்கி, பாடல்களைத் தோரணையோடு கம்பீரமாக வாசித்து வியாக்கியானம் செய்து கொண்டுவந்தார். சபையோரும் சிரக்கம்பம் செய்து அனுபவித்த வண்ணமாய் இருந்தார்கள். பிரசங்கம் முடிந்தது. பிரசங்கியிடம் கம்பரை இன்னுர் என்று பிரபு அறிமுகப் படுத்திஞர். பிரசங்கிக்கு அளவில்லாத சந்தோஷம் உண்டாகி, "அடடா! பாடல்கள் எல்லாம் எவ்வளவு அருமை! தங்களைக் கவிச்சக்கரவர்த்தி என்று சொல்லாமல் வேறு என்ன சொல்லுகிறது?" என்று கம்பரைப் பார்த்து வியந்த வண்ணமாய்ச் சொன்ஞர். ஆனல், கம்பரோ, "தாங்கள் வாசித்த இராமாயணத்தில் என்னுடைய பாடல்களும் ஒன்றிரண்டு சேர்ந்திருக்கிறதுபோலத் தெரிகிறது" என்று அமைதியாய்ச் சொல்லி நிறுத்திஞர்.

கதையாயிருந்தாலும், இது ஒரு உண்மையை நன்ருய்த் தெரிவிக்கிறது. கம்பராமாயணத்துக்குள் வேறு செய்யுள்களைப்

புகுத்திவிட்டார்கள் என்பதும், அதுவும் வெகு காலத்துக்கு முன்னேயே புகுத்தி விட்டார்கள் என்பதும், இதோடு, அறிவாளி கள் சிலருக்கு இந்த விஷயம் தெரிந்திருந்தது என்பதும் புலப்படுகிறது.

ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களிலும், பிறர் இடையிலே செருகிய பாகங்கள் உண்டு. "பிடாரி வசங்கியது" என்னும் நாடகத்தில், பாதிக்குமேல் ஷேக்ஸ்பியர் எழுதாதது என்று கண்டு முடிவு கட்டியிருக்கிறார்கள். ஷேக்ஸ் பியர் எழுதியது என்றால், அதில் ஜீவன் இருக் கும்; செருகிச் சேர்த்துள்ள பாகத்தில் ஜீவன் இராது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆங் கிலக் கவியின் தத்துவத்தை அறிந்து அனுப வித்த ஆங்கிலேய ஆசிரியர்கள், "ஷேக்ஸ் பியர், ஷேக்ஸ்பியர்தான்: வேறொரு புல வருக்கு அந்தத் தனிக் கவிப்பண்பு வராது" என்று உறுதியாகச் சொல்லிவிடுவார்கள்.

இவ்வளவும் கம்பர் சம்பந்தமாகவும் சொல்லலாம். கம்ப ராமாயணத்துக்குள்

எத்தனையோ செருகு கவிகள். அவைகளில் ஜீவனே கிடையாது. சில செருகல்களில், இலக்கணமோ பொருளோ, ஒன்றுமே கிடையாதுதான்.

கம்ப ராமாயணத்தில் இந்தச் சிதைவுகள் எல்லாம் ஏற்படுவதற்குக் காரணம் பல.

காரணம் ஒன்றிரண்டை இங்கே குறிப்பிடலாம்.

கம்பர், வால்மீகி ராமாயணத்தின் முக்கியமான அம்சங்களை எடுத்துக்கொண்டார். அவ்வளவுதான். கம்ப ராமாயணம் வால்மீகி ராமாயணத்தின் மொழி பெயர்ப்பு என்று எவ்விதத்திலும் சொல்லமுடியாது. கம்பர், தம் காலத்திலிருந்த தமிழ்நாட்டு மக்களுடைய மனப்பாங்குக்கு ஒத்திருக்கவேண்டும் என்று கட்டங்களை மாற்றி இருக்கிறார். அதைவிட, பாத்திரங்களின் சொரூபத்தையே மாற்றியிருக்கிறார். இவைகளெல்லாம் தம் கதையின் கட்டுக்கோப்புக்கு அவசியமென்றே கருதிச் செய்தார்.

**பி**ற்காலத்தில் உள்ளவர்கள், கம்பருடைய இதயப் போக்கையும் சிருஷ்டி தத்துவத்தையும் தெரிந்து கொள்ளாமல், கதை பூர்வமான வால்மீகத்தையே ஒட்டி இருக்க வேண்டுமென்று ஏதோ எண்ணங்கொண்டு, கம்பர் பாடல்களை அகற்றிவிட்டு, தாங்களாகப் பாடல்களை இயற்றிச் சேர்த்து விட்டார்கள். இது காரணமாகப் பல கட்டங்களிலே பொருத்த மின்மையும் வேண்டாத நீட்டமும் ஏற்பட்டிருக்கின்றன. இதெல்லாம் மிதந்தவாருகப் பார்த்தாலே யாருக்கும் தெரிந்து விடும். செருகிய கவிகளோ, உயிர்த் தத்துவம் கொஞ்சமேனும் இல்லாமல், விஷயத்துக்கும் இலக்கணத்துக்குமே மாறுபட்டவைகளாக இருக்கும்.

**இ**துபோக, இன்னொரு விசித்திரமான வேலையும் செய்திருக்கிருர்கள்.

**அ**ருமையான பண்ணும் **பா**வமும் நிறைந்த பாடல்களைப் பாடிப் பாடிப் பலரும்

அனுபவிப்பதை இப்போதும் பார்க்கிறோம். முற்காலத்திலும் இப்படி அனுபவிப்பது இயல்புதானே? சில பேர்வழிகளுக்கு, ஒன்றைப் பார்த்தால் அது போலவே தாமும் ஒன்று செய்ய வேண்டுமென்று ஆசை உண்டாகும். கம்பர் பாடல்களையும் பார்த்துத் தாங்களும் அந்தமாதிரிச் செய்துவிடவேண்டும் என்ற வேண்டாத ஆசை உண்டாய்விட்டது. உடனே, செய்யுள் இயற்றும் வழிகளைத் தெரிந்து கொண்டும், தெரியாமலுந் தான், போலிச்செய்யுள்களை எழுத ஆரம்பித்தார்கள். பிள்ளையார் கோவில், ஆற்றங்கரை முதலிய இடங்களில் தங்கள் சகாக்களுடன் இருந்து பாடி அரங்கேற்றினார்கள். சகாக்களும் 'பலே பலே' என்றார்கள். பலே போட்டதோடு நிற்கவில்லை. "தாங்கள் பாடியது கம்பர் பாடலைப் போலவே இருக்கிறது. கம்பர் பாடலோடு சேர்த்து விட்டால் நன்றாய் இருக்கும். கம்ப ராமாயணத்துக்கே அது பிரயோசனந்தானே?" என்றெல்லாம் தூபம்போட்டுவிட்டார்கள். கேட்பானேன்!

'புலவர்' வீட்டுக்குப் போனார். ராமாயண ஏட்டை எடுத்தார். ஒரு ஓலையை உருவினார். வேறு ஓலையை சேர்த்துத் தம் செய்யுளைப் புகுத்தி விட்டார்.

இந்த விதமாக, வாரத்துக்கு ஒரு முறை, மாசத்துக்கு ஒருமுறை என்றெல்லாம் கம்பருக்குத் தொண்டு செய்ய ஆரம்பித்தார். மற்ற சகாக்களும் இவரைப் பார்த்து இந்தத் தொழிலில் இறங்கி விட்டார்கள் என்று சொன்னால் மிகையல்ல தானே?

மேலே சொன்ன விதமாகச் செய்து புகுத்திய செய்யுள் ஒன்றிரண்டை மாதிரிக்காகப் பார்க்கலாம்.

உ

கம்ப ராமாயணத்தில் ஜடாயு ஓர் உயர்ந்த பாத்திரம். ஜடாயுவை ஒரு கழுகாக வைத்து, அதற்குள் அருமையான உணர்ச்சிகளையும் பாவங்களையும் ஊட்டியிருக்கிறார் கம்பர்.

## கவிக்கு வந்த வினை

ராமன், லட்சுமணன், இவர்களோடு சீதை ஆகிய மூவரும் மனித சஞ்சார மில்லாத வனத்தின் வழியாக வருகிருர்கள். ஜடாயு வாகிய கழுகு ஒரு குன்றின் சிகரத்திலிருந்து பார்த்தான். மூவரும் நெருங்கி வரவும், சொரூபம் தெளிவாய்த் தெரிய வந்தது. ராம ஊனப் பார்த்து, "நீ யார்? நீ என்னுடைய நண்பன் தசரதனுடைய சாயலில் இருக்கி ருயே! இந்தப் பாலேவனத்தில் வருவதற்குக் காரணமென்ன?" என்று கேட்டான். ராமன் "உண்மைதான். தசரதர் புத்திரர்தான் நானும், இந்த இலக்குவனும்" என்ருன். "நண்பன் தசரதன் சௌக்யமாயிருக்கிருஞ?" என்று ஜடாயு அருமையோடு கேட்டான். அதற்கு, தந்தையார் இறந்து போய்விட்ட தாக ராமன் சொன்ஞன். உடனே துயரம் தாங்காமல் மூர்ச்சையாய்க் கீழே விழுந்து விட்டான், ஜடாயு. இதைப் பார்த்து, "அடடா, இந்தக் காட்டில் இப்படி அன்பு உருவான ஆன்மா ஒன்று இருக்கிறதே! எவ் வளவு கஷ்டத்துக்கு உள்ளாய்விட்டான்!"

என்று பரிந்து, முகத்தில் தண்ணீர் தெளித்து, உணர்ச்சியுண்டாகும்படியாகச் செய்தார்கள் இராமனும் லட்சுமணனும். நடந்த விருத்தாந்தங்களை எல்லாம் அவர்கள் சொல்லக் கேட்டு, "ஐயோ! இப்படியெல்லாம் விதி நம்மைப் படுத்த வேண்டுமா?" என்று வருந்தி, "சரி, ஏதோ, தந்தை கட்டளையை மீறக் கூடாது என்ற நீதி இருக்கிறது. நீங்கள் எப்படியும் காட்டில் வசிக்க வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். வசிப்பதற்கு வாய்த்த இடம் ஒன்றைக் காட்டுகிறேன்" என்று ஆற்றங்கரை ஓரத்திலுள்ள சோலைகள் நிறைந்த ஒரு இடத்தைக் காட்டி விட்டுப் போய்விடுகிறான் ஜடாயு.

ராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போகும்பொழுது, ஜடாயு ராவணனோடு எதிர்த்துப் போர்செய்கிறான். எப்படியாவது சீதையை மீட்டுவிட வேண்டுமென்று தன்னுடைய சக்தி முழுவதையும் செலுத்தித் தாக்குகிறான். கடைசியில், வச்சிராயுதத்தைக்

கொண்டு ராவணன் ஜடாயுவின் சிறகுகளை வெட்டிவிட்டுத் தென்திசை நோக்கிப்போய் விடுகிறன். ஜடாயு, அப்படியே கீழேவிழுந்து அரைகுறை உயிரோடு கிடக்கிறன். இந்தச் சந்தர்ப்பத்தில், சீதையைத் தேடிய வண்ண மாய், ராம லட்சுமணர்கள் அங்கே வந்துசேரு கிறர்கள். ஜடாயு மரணத்தறுவாயில் இருக் கிற நிலையைப் பார்த்து ரொம்பவும் வருந்து கிறர்கள்.

"ராவணன் சீதையை எடுத்துக்கொண்டு தென் திசை போயிருக்கிறன் என்ற விஷ யத்தை உங்களுக்கு எப்படியாவது தெரியச் செய்துவிட வேண்டுமே என்ற ஆத்திரத்தி ஞல்தான் அரைகுறையாய் இருந்த உயிரை இதுவரை காப்பாற்றி வந்தேன். இந்தக் கடமையை நிறைவேற்றி விட்டேன்" என்று சொல்லி விட்டு உயிர் துறந்தான் ஜடாயு.

ராமனுக்கு இதை யெல்லாம் பார்க்க மனம் தாங்குமா? "என்ஞல் அல்லவா, என்னைப்

பெற்றெடுத்த தந்தை தசரதன் உயிர் விட்டான். இப்போது நீயும் எனக்காக உயிர் விட்டாயே! எமன் ஒருவன் இருக்கிறான் என்று சொல்லுவார்கள். என்னைப்போல் எமன் எங்கேதான் உண்டு? தங்களுடைய தந்தையரை (தாதையரைக்) கொலை செய்த பிள்ளைகள் கதையில்தான் உண்டா?" என்று கதறுகிறான்.

**தம்தா தையரைத்**
**தனயர் கொலைநேர்ந்தார்**
**முந்தாரே யுள்ளார்!**
**முடிந்தான் முனையொருவன்:**
**எந்தாயோ! எற்காக**
**நீயும் இறந்தனையோ!**
**அந்தோ வினையேன்**
**அருங்கூற்றம் ஆனேனே!**

மேலும் வருந்துகிறான்:

"என்னுடைய மனைவியைப் பகைவன் பற்றிக்கொண்டு போக, நீ எதிர்த்தாய்.

அப்படி எதிர்த்த உன்னைக் கொன்றவன் மண்ணோடு மண்ணாய்ச் சாயாமல் நிலத்தின் மேல் நின்ற வண்ணமாய் இருக்கிறானே! என் கண்ணுக்கு அப்படித் தெரிகிறதே! ஆனால், நீயோ இறந்து கிடக்கிறாய். என்னுடைய வீரத்தை என்னவென்று சொல்ல! பலமாகக் கட்டமைந்த சிலையை ஏந்தி நிற்கிறேன். எடுக்க எடுக்கத் தொலையாத அம்பு நிறைந்த அம்பறாத் தூணியையும் என் தோள் சுமந்துகொண்டு இருக்கிறது. ரொம்ப நன்றாய் இருக்கிறது!"

என்தாரம் பற்றுண்ண,
ஏன்றாயைச் சான்றோயைக்
கொன்றானும் நின்றான்;
கொலையுண்டு நீகிடந்தாய்;
வன்தாள்ச் சிலையேந்தி
வாளிக் கடல்சுமந்து
நின்றேனும் நின்றேன்,
நெடுமரம்போல் நின்றேனே!

மேலே சொன்ன இரண்டு பாடல்களிலும் துயர பாவம் நிறைந்திருக்கிறதாக யாருக்கும்

தெரிந்துவிடும். கம்பர் பாட்டு, கம்பர் பாட்டுத்தான். பாடப் பாட, பாவங்கள் புதிது புதிதாகத் தோன்றி வந்து நம் முன் நிற்கும். நம் இதயத்தைக் கவர்ந்த வண்ண மாய் நிற்கும்.

இவைகளை ஒட்டி, அடுத்த பாட்டாக ஒரு செய்யுள் கம்பராமாயணப் புத்தகத்தில் பார்க்கலாம். அது "என் தாரம் பற்றுண்ண" என்ற பாடலை வைத்துக்கொண்டு போலி யாகப் பாடியது.

போலிப் பாட்டு

சொல்லுடையார் என்போல்
இனியுளரோ தொல்வினையேன்
இல்லுடையாள் காண
விறகுடையாய், எண்ணிலாப்
பல்லுடையாய் உன்னைப்
படையுடையான் கொன்றகல
வில்லுடையேன் நின்றேன்
விறலுடையேன் அல்லேனோ!

## கவிக்கு வந்த வினை

“சொல்லுடையார் என்போல் இனி யுளரோ!” - என்னைப்போலப் புகழுடையவர் இனிமேல் உண்டோ? பழி வந்து விடும் என்பதாகப் பொருள். “சொல்லுடையார்” என்பது எந்த ஊர் வழக்கோ தெரியவில்லை. “இல்லுடையாள் காண விறகுடையாய்” - என் மனையாளைக் கண்டுபிடிக்கும் தந்திரம் உடையாய் என்று பொருள்படும். ‘விரகு’ என்றால் தந்திரம். இங்கே தந்திரம் என்ன வந்தது? ‘இறகுடையாய்’ என்றும் வாசிக்க லாம்; ‘என் மனையாள் கண் முன்னே கொல்லப்பட்டாய்’ என்று பொருளாகும். அது எப்படியேனும் போகட்டும்.

கழுகைப் பார்த்து “எண்ணிலாப் பல் லுடையாய்” என்று சொல்வதில் என்ன பொருள்தான் இருக்கிறதோ? **பா**வம் என்ப தைப் பார்த்தால், செய்யுளில் ஒன்றுமே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். மேலும், சொன்னதையே திருப்பிச் சொல்லு கிறது, ரசம் ஒன்றுமே இல்லாமல்.

௩

மற்ெருரு உதாரணம் :

ராவணனுக்கு உற்ற துணையான எத்தனையோ வீரர்கள் யுத்தத்தில் இறந்துபோய் விட்டார்கள். மகா வீரனை தன் தம்பி கும்பகர்ணனும் இறந்து போய்விட்டான். தனக்கு நெருக்கடியான நிலைமை வந்து விட்டது என்றே எண்ணுகிறான். ஆனாலும், தன்னுடைய மகன் இந்திரசித்து, இந்திரனையே வென்றவன். அவனால் வெல்லக் கூடாத வீரர் யாருமே இல்லை என்ற ஆறுதல் இருந்தது. எப்படியோ இந்திரசித்தும் போர்க் களத்தில் மடிந்தான். இந்தச் செய்தி காதுக்கு எட்டியதும் புத்தியே கலங்கிவிட்டது. என்ன செய்வது என்று ஒன்றும் தோன்றவில்லை. ஏதோ ஒருவிதமான வெறி மனசில் உண்டாகி, “இப்படி விளைந்ததெல்லாம் அந்தப் பெண் சீதையினால்தானே? அவளை இதோ வெட்டிக் கொன்று விடுகிறேன்” என்று கையில் வாளை

ஏந்தியவனாய், சீதை இருக்குமிடம் நோக்கிச் செல்லுகிறான். இதைப் பார்த்தான், மகோதரன். "அடடா! இந்தப் பழி ஒன்று நம்முடைய ராவணனுக்கு ஏற்படவேண்டுமா?" என்று பயந்தவனாய், ராவணன் காலில் விழுந்து மன்றாடுகிறான்.

"இந்த இலங்கையைச் சூழ்ந்துள்ள கடல் ஒருநாளும் வற்றாது. அடிவானத்தை ஒட்டித் தெரிகிற நெருப்பின் உருவமான மேகங்களும் என்றென்றும் விளைந்துகொண்டே இருக்கும். இந்த விசாலமான பூமியும் அழியாத வஸ்து. விண்ணில் எங்கும் நிறைந்துள்ள வஸ்துவான ஆகாயமும் என்றுமே இருப்பதுதான். கடலிலிருந்து வருகிற காற்றின் ஓட்டமும் ஒரு நாளும் ஒழியாது. இந்தப் பஞ்ச பூதங்கள் ஒரு நாளும் ஒழியாதவை. அப்படியேதான், இப்போது நீ ஏற்கப்போகிற பழியும் ஒரு நாளும் ஒழியாதது. போர் என்ற ஒன்று இருக்கிறவரையும் வெற்றி உன்னுடையது. புகழினாலேயே சிரஞ்சீவியாய் இருப்பவனும்

நீ. இத்தகைய நீயா ஒரு அனுதைப் பெண் ணைக் கொல்லும் பழிக்கு ஆளாகவேண்டும்!"

நீருள தனையும்,சூழ்ந் த
நெருப்புள தனையும்,நீண் ட
பாருள தனையும்,வா னப்
பரப்புள தனையும்,கா லின்
பேருள தனையும்பே ராப்
பெரும்பழி பிடித்திபோ லாம் !
போருள தனையும்வென் று
புகழுள தனையும்உள் ளாய் !

கம்பருடைய அற்புதமான பாடல்களில் இது ஒன்று. படிக்கிறவர்கள் இந்தப் பாடலைத் தயவுசெய்து நாலு தடவையோ ஐந்து தடவையோ சாவகாசமாகப் பாடி, மனசிலும் செவியிலும் பதிய வைத்துக் கொள்ளவேண்டும்.

இந்தக் கட்டத்தை விட்டுவிட்டு, முன்ன தாக உள்ள வேறு ஒரு கட்டத்துக்குப் போவோம்.

# கவிக்கு வந்த வினை

அங்கதன் தூதுபோகிற கட்டம்: ராமன் வானர சைன்யங்களோடு யுத்தம் செய்வதற்காகக் கடலை அணையின் வழியாகக் கடந்து, இலங்கையிலேயே வந்து தங்கி விடுகிறான். எப்படியாவது யுத்தம் இல்லாமல் காரியம் சித்தியாகும்படி செய்வது நல்லது என்று எண்ணுகிறான். அரக்கர்களுக்குள் விபீஷணனும் கும்பகர்ணனும் தரும சிந்தை யுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்று எண்ணினால் யாருக்குமே யுத்தம் செய்யத் தோன்றாது. கருணாமூர்த்தியான ராமபிரானிடத்தில் இப்படித் தோன்றியது இயல்பான காரியம் அல்லவா? ராவணனைக் கடைசியாக ஒரு முறை கேட்டுவிடலாம் என்று எண்ணி, வாலியின் மகனான அங்கதனைத் தூது செல்ல விடுகிறான்.

அங்கதன் ராவணன் முன்போய் நிற்கிறான். ராவணன் வேடிக்கையாக, "இந்த அரக்கர்கள் உன்னைத் தின்று விடுவார்கள். நீ யார் என்று சொல்லிவிடப்பா" என்றான். கடவுள்

அம்சமான ராமன் விட்ட தூதன் என்று அங்கதன் சொன்னான். "சரி, தூதெல்லாம் இருக்கட்டும். நீ யார்? உன் குலத்தைச் சொல்" என்றான் ராவணன். அங்கதனும் வேடிக்கையாகத்தானே, "ராவணன் என் பவனைத் தனது வாலில் கட்டி மலையிலிருந்து மலைக்குத் தாவி ரொம்ப சங்கடப்படுத்தி னானே, வாலி என்ற ஒருவன்: அந்த வாலியின் மகன்தான் நான்" என்றான். அதற்கு ராவணன், "ரொம்ப நல்லது. நீ என்னுடைய மகனும்தான். உன் தந்தையைக் கொன்ற ராமனுக்கு நீ ஆளாக இருக்கலாமா? இந்தத் தொழிலெல்லாம் உனக்கு வேண்டாம். கிஷ்கிந்தைக்கு அரசனாக நீயே இருக்கவேண்டும். உனக்கு நான் முடிசூட்டி வைக்கிறேன்" என்று பாராட்டிச் சொன்னான். "அழகு, அழகு! நாய் அரசைக் கொடுக்க, சிங்கம் அதை ஏற்கிற கதைதான் இது" என்று சொல்லிச் சிரித்தான் அங்கதன். கடைசியாக இந்த விளையாட்டுப்

பேச்சுக்களை விட்டுவிட்டு, தான் வந்த காரியத்தைச் சொல்லுகிறான்.

"உன்னிடத்தில் இரக்கம் கொண்டுதான் ராமன் என்னைத் தூது விட்டிருக்கிறான். சீதையை விட்டுவிடு. அல்லாத பட்சம் உன் உயிரை விட்டுவிட வேண்டியதுதான். உன்னிடத்தில் தைரியம் என்பது இருக்கிறதாகத் தெரியவில்லை. நீ கோழை. உன்னுடைய பாட்டி தாடகையை, ராமன் முன்பு கொன்றானே! அப்போது நீ போருக்கு வந்தாயா? உனக்கு ரொம்ப பிரியமான மாமன் மாரீசன் ராம பாணம் பட்டு இறந்தான். அப்போதும் நீ போருக்கு வரவில்லை. இதெல்லாம் போகட்டும். ராமன் காட்டிலிருந்தபோது, உன் அருமைத் தங்கை, சூர்ப்பனகை இருக்கிறாளே; அவள் வந்தாள். காதறுபட்டாள், மூக்கறுபட்டாள். அப்போதும் நீ வரவில்லைதான். இனிமேல் போர் வேறு செய்யப் போகிறாய்?" என்று காரமாகப் பேசினான் அங்கதன்.

பருந்துணைப் பர்ட்டியாக் கை
படுத்தநாள், பகழிபா ய
மருந்தினும் இனியமா மன்
மடிந்தநாள், வனத்துள்வை கி
இருந்துழி வந்ததங் கை
இருஞ்செவி மூலையும்மூக் கும்
அரிந்தநாள் வந்திலா தான்
இனிச்செயும் ஆண்மைஉண் டோ ? *

அங்கதன் பேசிய பேச்சில் இது முத்தாய்ப்பாக விழுகிறது. ஆங்கார **பா**வமும் இகழ்ச்சி **பா**வமும் ஒன்ருேடொன்று பின்னி, ஒவ்வொரு வார்த்தையிலும் வெளிவந்து கொப்புளிக்கின்றன. இனிமேல் பேசவேண்டியதில்லை அங்கதன்.

ஆனல், கம்பராமாயணப் புத்தகத்தில் ஆறு பாட்டுக்கள் அதிகமாகச் சொல்லி வளர்த்தியிருக்கிறது. வேண்டாத வளர்ப்பு. பாடல்களில் **பா**வம், சுவை, உயிர் ஒன்றுமே இல்லே. முதல் ஐந்து பாட்டுக்களையும் அப்படியே

---

*படுத்த - கீழே விழுந்த.

ஒதுக்கிவிட்டு, ஆறுவது பாட்டை மாத்திரம் பார்க்கலாம்.

மேலே மகோதரன் ராவணனைத் தடுத்த 'நீருளதனையும்' என்ற பாட்டை மறுபடியும் வாசித்துவிட்டு இதைப் பார்க்கவேண்டும்.

போலிப் பாட்டு

நீரிலே பட்டுச் சூழ்ந்த
 நெருப்பிலே பட்டு நீண்ட
பாரிலே பட்டு வானப்
 பரப்பிலே பட்ட வெல்லாம்
போரிலே பட்டு வீழப்
 பொருதநீ ஒளித்துப் புக்குன்
ஊரிலே பட்டாய் என்றால்
 பழியென உலையச் சொன்னான்.

இந்தச் செய்யுளில் 'நீர்' இருக்கிறது. 'சூழ்ந்த நெருப்பு' இருக்கிறது. 'நீண்ட பார்' இருக்கிறது. 'வானப் பரப்பு' இருக்கிறது. (மகோதரன் பாட்டிலும் இவை இருக்கின்றன.) ஆனால் பொருள் இல்லை.

எதுகை அமைவது தமிழில் எளிது. 'போரிலே பட்டு' 'ஊரிலே பட்டாய்' என்பதெல்லாம் எதுகைதான். விஷயம் உண்டா? இல்லை. கடைசியாக 'பழியென உளையச் சொன்னான்.' இந்தப் பழியும் மகோதரன் பாட்டிலிருந்து எடுத்துக்கொண்ட பழிதான்.

அர்த்தம் ஏதாவது சொல்லலாம்: அரக்கர்கள் நீரில் இருப்பார்கள், பாரில் இருப்பார்கள், வானத்தில் இருப்பார்கள், என்று சொல்லலாம். ஆனால், நெருப்பில் அரக்கர்கள் இருக்கிறார்கள் என்றால் என்ன அர்த்தமோ தெரியவில்லை.

௬

யாரோ சிலர், பொழுது போகாமல் விளையாட்டுக்காக (வினைக்கோதான்) எதுகை அகராதியைப் பார்த்துச் செய்யுளைக் கட்டிவிட்டார்கள். பின்னால் வந்தவர்களுக்கு இல்லாத கஷ்டமெல்லாம் வந்துசேர்ந்தது. அர்த்தமோ அனர்த்தமோ பண்ணித் தொலைக்க வேண்டும்

என்று ஏற்பட்டு விட்டது. கடைசியாகக் கம்பராமாயணம் என்ன ஆயிற்று ? சொல்லத் தான் வேணும் - குட்டிச்சுவராய்ப் போய் விட்டது !

மேலே கண்ட உண்மையான கம்பர் பாடல்களைத் திரும்பத் திரும்பப் பாட வேண்டும். பாடப் பாடப் புதிதான பொருளும் சுவையும் தென்படும். அந்தப் பாடல் களை விட்டு அப்பால் போகக்கூட முடியாமல் இருக்கும். பிறகு போலிப்பாட்டைப் பார்த் தால், கர்ண கடூரமாய் இருக்கும். மூளையே கலங்கப் பார்க்கும்.

இப்பேர்ப்பட்ட போலிப் பாடல்களை, சிறு பிராயமாய் இருக்கும்போது பள்ளிக்கூடத்தில் பாடமாகப் படித்து விடுகிறோம். இல்லாத அனர்த்தங்களை எல்லாம் சொல்லி, ' ஹா ஹா ' என்று வியந்து, நம்மையும் வியக்க வைத்து விடுகிறார்கள் ஆசிரியர்கள். நம்முடைய மனசு என்ன செய்ய முடியும் ? 'ஆமாம்' போட்டுத்

தொலேக்கிறது. பரீட்சை முடிந்தவுடன் புத்தகம் குப்பைக்குப் போய்விடுகிறது. படிக்கும் போது பட்ட கஷ்டம்மாத்திரம் மிஞ்சுகிறது மனசில்.

இப்போது நாம் பள்ளிக்கூடத்தில் மாணவர்களாக இல்லே. ஆதலால், சாவகாசமாகக் கம்பராமாயணத்தைப் படிக்கலாம். பாடல் நன்ருக இருந்தால் நல்லது. அல்லாத பட்சம், நன்ருக இல்லே என்று தள்ளிவிடலாம். அபாயம் ஒன்றும் இல்லே. கம்பர் பாடல்கள் எல்லாம் எளிதாகவே இருக்கும்; வாழ்க்கையில் அனுபவ முதிர்ச்சியடைந்தவர்களுக்கு ஒரு கஷ்டமும் இராது.

கம்பரைப் படிப்பதற்காக இலக்கணங்களேப் படிக்கவேண்டாம்; நிகண்டுகளேயும் அரும்பத அகராதிகளேயும் படிக்கவேண்டாம். ஆனல், வாழ்க்கையிலுள்ள தத்துவங்களேயெல்லாம் படிக்கவேண்டும். அரசர்களுடைய

இயல், வீரர்களுடைய இயல், தாயர் இயல், மனைவியர் இயல், எல்லாம் போக ஞானிகளுடைய இயல் - இவை எல்லாவற்றிலும் உள்ள உண்மையைக்காணவேண்டும். இயல்களை மோகம் உண்டாகும்படி கற்கவேண்டும். கற்கக் கற்க, கம்பர் நம்முடைய சொந்த உறவினராக ஆவார். நம்மிடம் வீரமாகப் பேசுவார். உருக்கமாகப் பேசுவார். உல்லாசமாகவும் பேசுவார்.

கம்பரைப்போல் நமக்கு ஆனந்தம் கொடுக்கக்கூடிய பொருளோ, பதவியோ உலகத்தில் இல்லை என்று தோன்றும். வானத்திலுமே இல்லை என்று சொல்லத் தோன்றும்.

முற்காலத்து ரசிகர் ஒருவர் மற்ற ராமாயணங்கள் சிலவற்றை வாசித்துவிட்டுக் கம்பராமாயணத்தையும் வாசித்துப் பார்த்தார். (அவர் யோகசாலி: செருகு கவிகளும் சிதைவும் இல்லாத கம்பராமாயண மூலமே அவர் கையில் இருந்திருக்க வேண்டும்.)

## கம்பர் யார்?

மனசில் எழுந்த பேருவகையைப் பாடலாகப் பாடினார் :

**இம்பர் நாட்டிற் செல்வமெலாம்**
**எய்தி அரசாண் டிருந்தாலும்,**
**உம்பர் நாட்டிற் கற்பகக்கா**
**ஓங்கும் நீழல் இருந்தாலும்,**
**செம்பொன் மேரு அனையபுயத்**
**திறல்சேர் இராமன் திருக்கதையில்,**
**கம்ப நாடன் கவிதையிற்போல்**
**கற்றோர்க் கிதயம் களியாதே!**

ஆம்,

**கம்ப நாடன் கவிதையிற்போல்**
**கற்றோர்க் கிதயம் களியாதே!**

## 8

# பாட்டினுல் வந்த தலைக்கிறக்கம்

பள்ளிக்கூடத்தில் விளையாட்டுப் போட்டி ஒன்றைப் பார்த்தது ஞாபகத்துக்கு வருகிறது. மைதானத்தில் இரண்டு கம்பங்களைத் தூரமாக விலக்கிநட்டு, இடையே கயிறு கட்டி, மத்தியில் மண்குடம் ஒன்றைத் தொங்கவிட்டார்கள். போட்டிக்கு வந்த பையன்களை (நாலு பையன்களை) எட்ட நிறுத்தி, குடத்தைப் பார்க்கச்செய்து, பிறகு கண்ணை நன்ருய்க் கட்டி, கையில் ஒரு

தடியையும் கொடுத்து, அவர்களைப் பரபர வென்று சுற்றி விட்டுவிட்டார்கள். பையன் கள் குடத்தின் கீழே போய்த் தடியினால் அதை உடைக்கவேண்டும்.

குடத்துக்குக் கீழ்த் திசையில் நின்ற பையன், திசை தப்பி, கிழக்கு நோக்கியே போய்த் தடியை வெகு வேகமாய் ஓங்கினான். சுற்றியுள்ளவர்கள் எல்லோரும் 'கொல்' என்று ஒரே சிரிப்பாய்ச் சிரித்தார்கள். ஏமாந்த பையன், "ஓகோ, குடம் சற்றே தவறிவிட்டது" என்று நினைத்துக்கொண்டு, அந்த இடத்திலேயே வளைய வளைய வந்து தடியை ஓங்கிக்கொண்டே இருந்தான். அது போலவே அவனுடைய சகாக்கள் மூன்று பேரும் ஒவ்வொரு மூலையில் நின்று ஆகாயத் தோடு சிலம்பம் ஆடிக்கொண்டிருந்தார்கள். நாழிகை ஆக ஆகப் பையன்களுக்கும் குடத் துக்கும் எட்டாத தூரமாய்ப் போய்விட்டது. பார்ப்பவர்களுக்கு இது ரொம்ப ரொம்ப வேடிக்கையாய் இருந்ததால், ஒவ்வொரு

விளையாட்டுப் போட்டியிலும் இந்த விளையாட்டு ஒரு அங்கமாகவே இருந்து வந்தது. ஆனால், ஒரு போட்டியிலாவது ஒரு பையன் குடத்தை உடைத்தான் என்பது கிடையாது. திக்குத் திசை தெரியாமல் போகும்படி தலை கிறங்க முதலில் சுற்றி விட்டதுதான் காரணம்.

உ

இதுபோல, தமிழ் வகுப்பில் தலைகிறங்கச் சுற்றிவிட்ட செயல் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது.

ஆங்கிலப் பள்ளிக்கூடங்களிலெல்லாம் அந்தக் காலத்தில் (இப்போதுந்தான்) ஆரம்ப வகுப்புக்களில், அவ்வையார் பாட்டு என்று கருதப்படுகிற நல்வழி, வாக்குண்டாம் முதலான பாடங்களைத் தமிழ்ப் பாடமாக வைப்பது வழக்கம். அவ்வையார் பாடல் என்பது பற்றி, பாடல்கள் எல்லாம் அருமையானவை

என்றே ஆசிரியர்கள் கருதி வந்தார்கள். அந்தப் பாடல்களில் இது ஒன்று.

பண்டு முளைப்ப(து) அரிசியே ஆனாலும்
விண்டுமி போனால் முளையாதாம் - கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

ஆசிரியர் உரை சொன்னார் :—"நெற்கதிர் முளைப்பதற்கு அரிசிதான் காரணம்; அதைப் பொதிந்துள்ள உமியல்ல. ஆனாலும் உமியானது விண்டு, அதாவது கிழிந்து, விலகிப் போய்விடுமானால் நெற்கதிரானது முளையாது" என்றார். விஷயம் தெரிந்துவிட்டது. ஆனால், 'பண்டு முளைப்பது' என்ற தொடரில் 'பண்டு' என்ற வார்த்தைக்குப் பொருள் பண்டும் தெரியவில்லை, இப்போதும் தெரியவில்லை. உபாத்தியாயர் கையில் பிரம்பு ஒன்று இருக்கும்போது, ஒரு வார்த்தைக்குப் பொருள் தெரியாமற் போனால் எவ்வளவு பயம் ஏற்படும், பையன் தலை எவ்வளவாகக்

கிறங்கும் என்று யோசித்துப் பாருங்கள். வார்த்தையோடு கஷ்டம் நிற்கவில்லை.

மேலே சொன்னது உபமானம். இனி உபமேயம் வரப்போகிறது. ஒருவனுக்கு மிகுந்த சக்தி இருந்தபோதிலும் உதவி ஒன்று இல்லாமல்போனால், தான் எடுத்துக்கொண்ட காரியத்தைச் செய்து முடித்தல் இயலாது. ஒரு வகையாக இது உபமானத்தோடு பொருந்தி விடுகிறது. ஆனால், இதற்கு வார்த்தை இருக்கிறதா? இல்லை. 'அள வின்றி ஏற்ற கருமம்', தன் சக்திக்கு மிஞ்சிய காரியம் என்றுதான் பொருள்படும். ஆசிரி யரும் உரையாசிரியர்களும், 'அளவின்றி' என்றால் 'உதவியின்றி' என்று துணிந்து பொருள் சொல்லிவிட்டார்கள். நேர் பொரு ளாய்ப் பார்த்தாலோ, உபமானத்துக்கும் உபமேயத்துக்கும் சம்பந்தமே இல்லை. பையன்கள், வகுப்பிலும் பரீட்சையிலும் எப் படியாவது மொட்டைத் தலைக்கும் முழங்கா லுக்கும் முடிச்சுப் போட்டுவிட வேண்டும்.

அல்லாத பட்சம், அவர்கள் கதி அதோகதி தானே?

இந்தப் பாட்டிலிருந்து, பையன்களுக்குத் தமிழ் சம்பந்தமாக ஒரு திகைப்பு உண்டாய் விடும் என்பதில் சந்தேகமில்லை. வார்த்தை ஒன்ருய் இருக்கலாம்; பொருள் அதற்குச் சம் பந்தம் இல்லாமல் வேருென்ருய் இருக்க லாம்; தமிழ்ப் பாட்டு என்ருல் உபமானத் துக்கும் உபமேயத்துக்கும் சம்பந்தம் இருக்க வேண்டியதில்லை என்றெல்லாம் உள்ளுக் குள்ளே எண்ண ஆரம்பித்து விடுகிருர்கள்.

இரண்டாவது பாரம் மூன்ருவது பாரத்தோடு பள்ளிக்கூடத்தைத் தொலைத்து விட்டுப் போய்விடுகிற பையன்களை அவ்வள வாக இது கெடுத்துவிடாது. பி. ஏ., பி. எல்., எம். ஏ., எம். எல். வரைக்கும் எட்டுகிறவர்க ளில் தமிழை அலட்சியம்செய்கிறவர்கள் பலர். அவர்களையும் இது கெடுத்துவிடாது. ஆனுல், தமிழில் பிரமைகொண்டு, தமிழ்நூல்களை

அனுபவிப்பதாக எண்ணிக்கொண்டு, அவைகளோடு பழகிக்கொண்டிருக்க நேர்ந்தவர்கள்பாடு கஷ்டந்தான். தமிழ்ச் செய்யுள் என்ருல் அதை ஜோராய்ப் பாடவேண்டும்; அதிலேயே மயங்கவேண்டும்; வார்த்தைகளுக்குப் பொருள் உண்டா இல்லையா என்றே கவனிக்க வேண்டாம்; பொருள் இருக்கவேண்டும், இலக்கணம் அமைய வேண்டும் என்பதெல்லாம் அனுவசியம்: இப்படியாக எண்ணி எண்ணி, ஆங்கிலம் கற்றுத் தமிழோடு பழக்கம் வைத்திருக்கிறவர்கள், ஒரு பாட்டுக்கு யாராவது ஒரு பொருளை நேர்மாருகச் சொல்லிவிட்டாலும், அதை அப்படியே அங்கீகரிப்பது சகஜமாய்ப் போய் விட்டது.

௩

ஒரு வெண்பா, பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாட்டு என்று கருதப்பட்டு வந்திருக்கிறது. காதல் துறையில் நன்ருய் அமைந்துள்ளது.

## கம்பர் யார்?

ஒரு பெண் திருவரங்கப் பெருமாளிடம் காதல்கொண்டு விட்டாள். தனக்கு அவர் கிட்ட மாட்டாரோ என்ற ஏக்கத்திஞல் ஆகாரம் ஏற்காமல் தேகம் மெலிவுற்று உயிரே போய்விடும் என்ற நிலையில் இருக்கிருள். ஜன்னிக் கோளாறு ஏற்பட்டுச் சில வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருந்தாள். ஏதோ அரைமணிக்கு ஒரு தடவை 'துளவ!'- துளப மாலையை அணிந்தவனே என்ற பொருளில் - சொல்லுவாள். சரி சரி, உயிர் இருக்கிறது என்று பக்கத்தில் உள்ளவர்களுக்குச் சிறிது ஆறுதல் உண்டாய்க்கொண்டிருந்தது. ஆஞல் இப்போது, 'துளவ!...துளவ!... துளவ!' என்று இடைவிட்டுச் சொல்லுகிறதும் நின்றுவிட்டது. பெரிய மோசமாய்ப் போய்விட்டது. இந்த நிலையைத் தோழியானவள் திருவரங்கப்பெருமாளிடம் போய்ச் சொல்லி முறையிடுகிறதாக **பா**வம்:

## தலைக்கிறக்கம்

**துளவ ! துளவ !எனச்**
**சொல்லும்சொல் போச்சே !**

உயிர் போகிற சமயம் ஆனதால் சிலேஷ்மம் வந்து நெடுமூச்சுப் பிறந்துவிட்டது.

**அளவில் நெடுமூச்சும்**
**ஆச்சே !**

" தாமரைப் புஷ்பம் (முளரி) போன்ற எங்கள் நாயகியின் கையும் காலும், ஐயோ ! குளிர்ந்து போய் விட்டதே" என்பதாகத் தோழி அலறுகிறுள்.

வெண்பா எவ்வளவு அழகாய் அமைந்து வருகிறது என்பதைப் பார்ப்போம்:

**துளவ ! துளவ் ! எனச்**
**சொல்லும்சொல் போச்சே,**
**அளவில் நெடுமூச்சும்**
**ஆச்சே, - முளரிக்**
**கரம்கால் குளிர்ந்ததே,**
**கண் ணும்பஞ் சாச்சே,**
**இரங்காய் அரங்கா இனி.**

"இனித் தாமதிக்கக் கூடாது. உடனே வந்து நாயகிக்கு அருள்செய்ய வேண்டும்" என்பதான வேண்டுகோள்தான் பாட்டு.

ஆனால், புஸ்தக ஆசிரியர்கள் இந்தப் பாட்டுக்குக் கூறிய பொருள் வேறுவிதம். பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஒருநாள் பெருமாளைத் தரிசனம் செய்ய ஸ்ரீரங்கத்துக் கோவிலுக்குப் போனார். பசுமாடு ஒன்று வந்து முட்டி விட்டது. அதுகாரணமாகவே அவர் சிறிது நேரத்தில் உயிர் துறக்க நேர்ந்தது. உயிர் துறக்கும் தறுவாயில், கடவுளை இந்தவிதமாக வேண்டினார் :

"என்னால் இப்போது 'துளவ, துளவ' என்று வாய்திறந்து பேச முடியவில்லை, சிலேஷ்மத்தினாலே நெடுமூச்சுப் பிறந்து விட்டது. நெடுமூச்சும் அளவில்லாமல் நீடித்துக்கொண்டே போகிறது. (கையையும் காலையும் தொட்டுப் பார்த்துக்கொண்டு,) ஆ! கடவுளே! தாமரைப் புஷ்பம் போன்ற

என்னுடைய கையும், காலும் குளிர்ந்து போய்விட்டன, கண்ணும் பஞ்சடைந்து விட்டது, பார்த்தீரா ? ஒரு நொடியில் உடலைவிட்டு உயிர் போய்விடும். இனித் தாமதிக்கக் கூடாது. திருவரங்கப் பெருமானே, இப்போதே எனக்குக் காட்சி கொடுக்கக் கருணை செய்யும்!” இவ்வளவை யும், ஐயங்கார், தளைதட்டாத வெண்பாவில் சொன்னார்!!!

பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் வாழ்க் கையை ஆராய்ச்சி செய்து முடிவு கட்டி முகவுரை எழுதியுள்ள எந்த அஷ்டப்பிரபந்த நூலை எடுத்துப்பார்த்தாலும், மேலே சொன்ன முறையில் பாட்டுக்கு உரை எழுதியிருப் பதைப் பார்க்கலாம். இப்படி உரை எழுதி யிருப்பதற்குக் காரணம், சிறு பிராயத்தில் மூன்ருவது நாலாவது வகுப்பில், ‘பண்டு முளைப்ப தரிசியே ஆனாலும்’ என்ற பாட்டை ஆசிரியரிடம் பாடமாகக் கேட்டதுதான்.

௪

இனி, 'பண்டு முழைப்ப தரிசியே ஆனு லும்' என்ற பாட்டுக்கு இன்னொரு தம்பி. அதையும் பார்க்கலாம்.

பண்டைக் காலத்துத் தமிழ் நூல்கள் பல எப்படியோ நம் கைக்கு வந்திருக்கின்றன. ஆனால், அவை எந்தக் காலத்தில் எழுதப் பட்டன என்று அறிவதற்கு அனேகமாக அவைகளில் குறிப்புக் கிடையாது. ஏதோ கல் வெட்டுக்கள், இதர தேசத்து ஆசிரியர் கள் எழுதிப்போன குறிப்புக்கள் இவைகளை வைத்து அனுமானம் மூலமாகக் காலத்தை எட்டிப் பார்க்கிறதே ஒழிய வேறில்லை. திருக் குறள், திருவாசகம், ஆழ்வார் பாடல்கள் இன் னும் பல நூல்கள் சம்பந்தமாகக் கால வரை யறை சொல்ல இயலாமல்தான் இருக்கிறது.

ஆனாலும், ஒரு நூல் சம்பந்தமாகக் காலம் திட்டமாய்த் தெரிந்தது என்று எண்ணிக்

கொண்டிருந்தோம். அதுதான், கம்ப ராமாயணம். சாலிவாகன சகாப்தம் எண்ணூற்றேழில் நூல் அரங்கேற்றப்பட்டது என்று சொல்ல இடம் இருக்கிறது. அரங்கேற்றிய சமயத்தில் யாரோ ஒருவர், (சாமானியமாகத் தமிழ் கற்றிருந்தவர்,) சாற்றுகவியாக மூன்று செய்யுள்களைப் பாடினார். இப்படிப் பாடுவது நெடுகிலும் சம்பிரதாயந்தான்.

ஒரு செய்யுளில், "எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின் மேல்" "பங்குனி அத்த நாளில்" கம்பர் ராமாயணத்தை அரங்கேற்றினார் என்ற குறிப்பு வருகிறது.

இந்தக் காலவரையறைக் குறிப்புக் காரணமாக, கம்பர் உயர்ந்துபோய்விடுவார் என்று எண்ண வேண்டியதுண்டோ? இல்லை. ஆனாலும், நம்மவரில் சிலருக்கு எப்படியோ பயம் வந்துவிட்டது. கம்பருடைய காலைப் பற்றிக் கரகர என்றிழுத்து, அவரைப் பிற்காலத்தவர்தான் என்று சொல்லிவிட

வேண்டும் என்று தீர்மானம் பண்ணிவிட்டார்கள். அதற்காக, 'எண்ணூற்றேழு' என்பதை 'எண்ணப்படாநின்ற நூற்றேழு' என்று வைத்துக்கொண்டு, அதோடு ஆயிரத்தைச் சேர்த்து (லட்சத்தை, கோடியை அல்ல; ஆயிரத்தை மட்டும்), ஆயிரத்து நூற்றேழு என்று பொருள்செய்து, கி. பி. பன்னிரண்டாவது நூற்றாண்டின் இறுதி என்று சொல்லி விட்டார்கள். ஆனாலும், இந்தக் கணித சாஸ்திரம் அவர்களுக்கே அவ்வளவு திருப்திகரமாகத் தோன்றவில்லை. கடைசியாக, அவர்களுக்கு ஒரு செய்யுள் ஆதாரமாகக் கிடைத்து விட்டதாம். அதைப் பற்றியும் கொஞ்சம் பேசலாம்.

தமிழில் வித்துவான் பரீட்சை தேறிய இளைஞர்கள் சிலரைச் சமீபத்தில் சந்திக்க நேர்ந்தது. அவர்கள் எல்லோரும் கம்பர் காலம் பன்னிரண்டாவது நூற்றாண்டின் இறுதி என்று சந்தேகத்துக்கிடம் இல்லாமல் சொன்னார்கள். 'உங்களுக்கு எப்படி அவ்வளவு

நிச்சயமாகச் சொல்லமுடிகிறது?' என்று கேட்டேன். "'ஆவின் கொடைச் சகரர்' என்ற பாட்டுத்தான் இருக்கிறதே" என்றார்கள். 'பாட்டைச் சொல்லுங்கள்' என்று கேட்ட போது, 'மனப்பாடம் இல்லை' என்றார்கள். நானும், 'அடடா! அவ்வளவு நிச்சயமாக வருஷத்தைக் குறிப்பிட்டுச்சொல்லுகிற பாட்டு ஒன்று இருக்கும்போது, அது பலருக்கும் தெரிந்திருக்க வேண்டியதல்லவா? தெரியாமல் போயிற்றே! என்று வருத்தப்பட்டேன். பிறகு, அந்தச் செய்யுளைக் கண்டு பிடித்துக் கொண்டேன். ஸ்கூல் பைனல் பரீட்சைக்கு சர்க்கார் போட்ட தமிழ்ப்பாட புஸ்தகத்தில் கம்பரைப் பற்றி எழுதியிருந்த உரைக்குறிப்பில் அதைக் கண்டுகொண்டேன்.

செய்யுளைச் சொல்லுவதற்குமுன், சில விஷயங்களைக் கொஞ்சம் ஞாபகப் படுத்திக் கொள்ளுகிறேன்.

## கம்பர் யார்?

கம்பர் பிறந்த இடம் என்று சொல்லுகிற திருவழுந்தூர், தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கிறது. அங்கிருந்து மூன்று மைல் தூரத்தில் மூவலூர் என்று ஒரு சிறு கிராமம் இருக்கிறது. இந்த இரண்டு இடங்களுக்கும் நான் போயிருக்கிறேன்.

ஒரு காலத்தில் திருவழுந்தூர் வட்டத்துக்குள் மூவலூர் ஒரு கிராமமாக இருந்தது. அந்த மூவலூரில் ஆதித்தன் என்ற பெயரோடு ஒருவன் இருந்தான். அவனுக்கு மகன் ஒருவன் இருந்தான். அந்த மகன் பெயர் இன்னதென்று தெரியவில்லை. அவன் 'காகுத்தன் கதை' (காகுத்தன் - ராமன்) என்ற ஒருநூலை இயற்றினான். விருத்தமாகப் பாடினானா, வெண்பாவாகப் பாடினானா, அல்லது 'அல்லி அரசாணிமாலை', 'பஞ்சபாண்டவர் வனவாசம்' போன்ற ஒரு வகைப் பாவினத்தில் பாடினானா என்பது தெரியாது.

# தலைக்கிறக்கம்

தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு - மூவலூர்
சீரார் குணாதித்தன் சேய்அமையப் பாடினான்
காரார்கா குத்தன் கதை.

வெண்பாவில் பின்மூன்றடிகளான இந்த வரிகளிலிருந்து மேலேசொன்ன விஷயங்கள் தெரியவரும்.

இப்போது முதலடியும் சேர்த்துப் பார்ப்போம்.

ஆவின்கொடைச் சகரர் ஆயிரத்து நூறொழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு - மூவலூர்
சீரார் குணாதித்தன் சேயமையப் பாடினான்
காரார்கா குத்தன் கதை.

முதலடியில் வருகிற 'ஆயிரத்து நூறு' என்பதற்கு ஆயிரத்து நூறாவது ஆண்டு என்று பொருள்சொல்லுகிறார்கள். எப்படிச் சொல்ல முடியும் என்று தான் தெரியவில்லை. 'சகரர் ஆயிரத்து நூறு' என்றால் ஏதாவது ஒரு கூட்டத்தைத்தான் குறிக்கும். மக்கள்



†

கூட்டத்தையோ தேவர் கூட்டத்தையோ குறிக்கவேண்டும். (சகரர் ஆண்டு என்று வந்தால் அல்லவோ ஆண்டைக் குறிக்கும் ?) 'ஒழித்து' என்பதற்கு அதம்செய்து என்று தான் பொருள்சொல்லத் தோன்றுகிறது.

ஆனால், 'ஒழித்து' என்பதற்கு இலக்கண முடிபு என்ன ? 'ஒழித்த தேவன்' என்று பாடம் இருந்தால், ஆயிரத்துநூறு சகரர்களை யும் அதம்செய்த கடவுள் எழுந்தருளியிருக் கும் திருவழுந்தூர் என்று பொருளுரைக்க லாம்.

இனி, 'ஆவின் கொடை' என்பதற்குப் 'பசு ஈன்றெடுத்த' என்று பொருள் சொல்ல லாம். இது ஏதோ ஒரு புராணக்கதையை எப்படியோ கோணல் மாணலாகச் சுட்டிக் காட்டியதாகத் தெரிகிறது. பாட்டியற்றிய பிரகஸ்பதி, நூல் எழுதியவர் பெயரை விட்டு விட்டுத் தந்தையின் பெயரை மாத் திரம் குறித்தது ரொம்பவும் விசித்திரம்.

கம்பர் என்ற பெயரோ வரவேயில்லை. பாட்டில் எது எப்படிப் பொருள்பட்டாலும், ஆயிரத்து நூறு என்ற எண் வருஷத்தைக் குறிக்கவில்லை என்பது தெளிவு. இருந்தாலும் தமிழ் ஆசிரிய உலகம் 'வருஷம்' என்று வெகு தீர்க்கமாய்ச் சொல்லியும் பாட புஸ்தகங்களில் எழுதியும் வருவதற்குக் காரணம் என்ன? 'பண்டு முளைப்ப தரிசியே ஆனாலும்' என்ற பாட்டை ஆதியில் கற்ற தோஷந்தான்.

இந்த மாதிரியெல்லாம் ஆராய்ச்சி செய்து வந்ததிலிருந்து, நுட்பமாக விஷயங்களைக் கவனிக்கிறவர்களுக்குத் தமிழ் கற்கிறவர்களைக் கண்டாலே கேலி. தமிழினிடத்தில் எல்லாம் கோணல், அது அறிவையே கெடுத்து விடும் என்று எண்ணித் தமிழ் பாஷையினிடத்தில் நம்பிக்கையே இல்லாமல் போய்விட்டது.

உண்மையில், தமிழ் பாஷை எதையும் எளிதில் நேர்முகமாக எடுத்துச் சொல்லும்

திறம் வாய்ந்தது. கவியைப் பார்த்தால் தமிழ்க் கவியைப்போல எளிமையான கவி வேறில்லை என்று சொல்லலாம். இது வெறும் ஜம்பமான வார்த்தை அல்ல. ஆங்கிலக் கவியை இன்னும் கஷ்டப்பட்டுத் தான் கற்கிறோம். விஷயங்களை மாத்திரம் உணருகிறோமே ஒழிய, பாஷையின் **பா**வங்களை உணருவது இல்லை. உணராது போனால், பாட்டு கஷ்டந்தானே ?

ஆங்கிலக் கவி நமக்கு மாத்திரமா கஷ்டம்? ஆங்கிலேயருக்கே கஷ்டமாம். சாமானிய ஆங்கிலேயருக்கா? வசன இலக்கியங்களில் நல்ல பயிற்சியுடைய நிபுணர்களுக்கே கஷ்டம் என்கிறார், ஆர்னல்ட் பென்னெட் என்ற பிரபல ஆசிரியர். " ஆங்கிலேயர் கூடிய ஒரு கூட்டத்தைக் கலைக்க வேண்டுமானால், கொள்ளைநோய் வந்து விட்டது என்று சொன்னால் கலையாது, தண்ணீர்க் குழாய் கொண்டு வேகமாய் அடித்தாலும் கலையாது. கவி

வருகிறது என்று சொல்லிவிட்டால் அப் படியே கலைந்து விடும்" என்கிறார்.

பொதுவாக, நம்மவர் ஆங்கிலக் கவியி லிருந்து 'கொட்டேஷன் அடிக்கிறது' (மேற் கோள் காட்டுகிறது) என்றால், கேட்கிறவர் களுக்கு விளங்க வேண்டும் என்பதல்ல விஷ யம். அவர்களைத் திணற அடிக்கவேண்டும் என்பதுதான் கருத்து. உண்மையில் திணற வும் அடித்துவிடுகிறார்கள்.

ஆனால், தமிழ்க் கவியை, சொல்லுகிறபடி சொன்னால், தமிழர்களாகிய யாரும், ஆடவ ரும் பெண்டிருமே உணருகிறார்கள், அனு பவிக்கிறார்கள். தமிழர்களை விட்டுவிடுவோம். மலையாள நாட்டில், கோயில்களில் உத்ஸவ காலங்களில், கம்ப ராமாயணத்தைப் பாடிப் பிரசங்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக் கிறார்கள். அதற்கென்றே மானியமும் விட் டிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கான மலை யாளிகளே வந்து கேட்டு அனுபவிக்கிறார்கள்.

உண்மையான தமிழ்க் கவி அவ்வளவு எளிமையோடும் ரசத்தோடும் கூடியதாய் இருக்கிறது.

உண்மை இப்படி இருக்க, தமிழர்களுக்கு - அதிலும் கல்வி பயின்ற தமிழர்களுக்கு - தமிழில் நம்பிக்கை அற்றுப் போவானேன்? 'தமிழ், கஷ்டம் ஸார்' என்றெல்லாம் அவர்கள் சொல்வானேன்? கலாசாலைகளில் (ஸ்கூல்களில், காலேஜ்களில்) பாடம் வைக்கிற பாடங்களும் கற்பிக்கிற முறையுந்தான் காரணம். சுருங்கச் சொன்னால் 'பண்டு முளைப்ப தரிசியே' தான் காரணம்.

இந்தக் குட்டிக்கரணங்கள் எல்லாம் தமிழுக்குத் தான் சிறப்பாக உரியன என்று சொல்லத் தோன்றும் சிலருக்கு. ஆனால், இது போன்ற காரியங்களில், மேல்நாட்டு நிபுணர்களும் நம்மை முதுகுக்கு மண்காட்டியிருக்கிறார்கள்.

## தலைக்கிறக்கம்

மேல்நாட்டில், அறிவியல்க்கலை ஆராய்ச்சியில் நிபுணர்களான அங்கத்தினர் கூடிய சபையொன்றில் ஆராய்ச்சிக்காக ஒரு விஷயத்தை ஒருவர் சமர்ப்பித்தார். 'ஒரு மீனானது, உயிரோடிருக்கும்போது இருப்பதைக் காட்டிலும் இறந்துபோன பிறகு அதிகப் பளுவாய் இருப்பதற்குக் காரணம் என்ன?' என்பதுதான் கேள்வி. நிபுணர்கள் எல்லோரும் ரொம்ப ரொம்ப ஆலோசனை செய்தார்கள். தங்கள் அபிப்பிராயத்தைத் தாங்கி, தஸ்தா தஸ்தாவாகக் கட்டுரைகள் எழுதித் தள்ளினார்கள். வெளியேயுள்ள காற்று உயிரற்ற உடலுக்குள் நுழைந்து ஊறி விடுவதால்ப் பளுவாய் விடுகிறது என்று சிலர் வாதித்தார்கள். வேறு சிலர், தசைநரம்புகளிலுள்ள வாயுக்கள் வெளியே போய்விடுவதால்ப் பளுவாய் விடுகிறது என்று எதிர்த்து வாதாடினார்கள். தர்க்கம் முடிவுக்கு வருகிறபாடாக இல்லை. கடைசியாக ஒருவர் கேள்வி கேட்டார்: "யாராவது நிறுத்துப் பார்த்து, உயிரோடு கூடிய

மீனைவிட இறந்துபோன மீன் பளுவாய் இருக்கிறதென்று கண்டதுண்டா?" என்று. பிறகு தான், நிறுத்துப் பார்த்தார்கள். நிறையில் யாதொரு வித்தியாசமும் இல்லை என்று தெரிந்ததாம்!

சறுக்கி விழுவது யாருக்குமே சகஜந்தான் என்பது தெரிகிறதல்லவா? ஆகையால், தமிழர்களாகிய நாம் ரொம்ப அவமானப்பட்டுப் போய்விட வேண்டியதில்லை. ஆனாலும், ஆராய்ச்சிக்குள் புகும்போது, கையில் ஒரு விளக்கு இருந்தால் நல்லது. எங்கேயாவது முட்டி, மூக்குக்குப் பங்கம் வராமல் இருக்க வேண்டும், அவ்வளவுதான்.

3462

3462

கிடைக்குமிடம் :—

1. புதுமைப் பதிப்பகம்,
3, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
சென்னை.

2. முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை.